உ
சிவமயம்

# அருள் ஒளி



ஐப்பசி மாத
இதழ்

மலர்
39

## நவராத்திரி சிறப்பு மலர்

வெளியீடு
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை,
இலங்கை.
2005

# கொலு



# வாத்தியங்கள்



உ

# அருள் ஒளி



(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
**திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்**

உதவி ஆசிரியர்:
**சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்**

2005 பார்த்திப வருடம் ஐப்பசி மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மலர் **39**

தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல. **QD/74/NEWS/2005**


## எங்கும் எதிலும் சக்தியடா

*உலகை ஈன்ற அன்னை பராசக்தியை பாடிப்பரவி பணிந்து வணங்கி வாழ்வு கேட்கும் நாள் நவராத்திரி. உயிர் வாழ்பவைகளை நிலத்திணை, இயங்குதிணை என இரண்டாகப் பிரித்து ஆராய்வார்கள். மரம் செடி கொடிகள் முளைத்த இடத்திலேயே அவைகள் நிற்கவும், படுத்துக்கிடக்கவும் படர்ந்து போகவும் செய்கின்றன. இயங்குதிணை இடம்மாறிப் போகவல்லது. நடப்பன, பறப்பன, நீந்துவன யாவும் இயங்குதிணையைச் சேருகின்றன. சில உயிர்வகைகளுக்கு இயல்பாகவே நீந்தத் தெரியும். ஆறறிவுடையவன் என பெருமைப்படும் மனிதனுக்கு இயல்பாக நீந்தத் தெரியாது. மனிதனோ நீந்தக் கற்றாக வேண்டும். இதே போல் இயல்புக்கு மாறான பல விடயங்களை மனிதன் தன்முயற்சியால் கற்றுக்கொள்கிறான். அவற்றில் நன்மையுமுண்டு தீமையுமுண்டு. உலகை ஈன்ற பராசக்தியிடம் ஒன்பது இரவுகள் ஒளி விளக்கேற்றி வீரம், செல்வம், கல்வி தந்து வெற்றியான வாழ்வுதா என மானிடம் மன்றாடுகிறது. மற்றைய ஜீவராசிகளுக்கு இல்லாத ஆற்றலை, அறிவை, ஆளுமையைத் தந்த அன்னை அதன் மகிமையைப் பேணுமாறு அறிவுறுத்தும் நன்நாளே! நவராத்திரி வைபவத்தின் உட்பொருள் என்பதை நாம் உணர வேண்டும். நாம் செய்த தவறுகளுக்காக மன்னிப்புக்கேட்டு மன்றாடுவதும், எனிமேல் நல்லவராய், வல்லவராய், இன்புற்று வாழ்வதற்கு வரம் கேட்பதும் இத்தகைய நாள்களில் நாம் செய்யும் வழிபாட்டின் அம்சமாக இருத்தல் வேண்டும். இன்று இவ்வையகம் இனியதாய் இருப்பதற்கு இடரின்றி வாழ அன்னையே அருள்தா என அனைவரும் பிரார்த்தனை செய்ய வேண்டும்.*

எதற்கும் அஞ்சா நிலை தருவாய்
எங்கள் தைரிய லட்சுமியே
இதத்தின் நின்றன் திருவடியை
இறைஞ்சி வணங்கி வாழ்வோமே.

என்று பாவலர்கள் தைரிய லட்சுமியை வரங்கேட்டுப் பாடினார்கள். அச்சம் தவிர்த்து வாழ அன்னையை நாம் வேண்டுதல் செய்ய வேண்டும். எல்லாச் செல்வமும் இருந்தும் அச்சம் எம்மோடு குடிகொள்ளுமானால் வாழ்வில் அர்த்தம் இல்லை. அச்சமின்றி வாழ அஞ்சேல் என ஆறுதல் தரும் அன்னையை நன்றியோடு வழிபாடு செய்தல் நம் கடனாகும். மகிழ்வு தருபவள் மகாலட்சுமி. பொன் பொருள் மட்டுமல்ல புன்னகையும் செல்வம் என உணர்த்துபவள் இவள். சியம் முழுவதும் நாம் சிரித்து வாழ இன்நாளில் வரங்கேட்போம். நாமும் சிரித்து மற்றவர்களையும் சிரித்து வாழவைக்க அறம் செய்வோம் என இன்நாளில் அறுதியிட்டு மன்றாடுவோம்.

ஆறறிவு தந்து, ஆயகலைகள் அறுபத்துநான்கும் இவ் அவனிக்குத் தந்து சிந்திக்க வைத்த கல்வித் தெய்வத்துக்கு போற்றுதல் செய்து புனிதம் பெற நாம் முனைவோம்.

நல்லதோர் வீணை செய்து அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி எமைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே.

என்று மகாகவி பாரதியார் பாடிய பாவரிகளுக்கு அமைய பயனுற வாழ பராசக்தியிடம் வாழ்வுகேட்டு பயன் பெறுவோமாக.

-ஆசிரியர்

இழைக்கும் வினைவழியே அடுங்காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தமெல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.

# புரட்டாதி மாத சனிக்கிழமை விரதம்

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**

காலத்துக்கு மதிப்புக் கொடுத்து வாழ்பவர்கள் நாங்கள். **"ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே"** என்று பாடினார் ஞானசம்பந்தப் பெருமான். இக்கோளறு பதிகத்தை ஓதி ஓதி நாளும் கோளும் நலியா வண்ணம் வாழத் துடிப்பவர்கள் நாங்கள். எங்கும் எதிலும் இறையருளை வேண்டி நிற்பவர்கள் நாங்கள். கிரக தோஷங்கள் அனைத்தும் இறையருளால் சாந்தப்படுகின்றன என்பது அருளாளர்கள் நம்பிக்கை. இந்த அற்புதமான அனுபவம் எனது வாழ்நாளில் எவ்வாறு பயன் தருகின்றன என்பதை வாசகர்கள் கருத்துக்கு பகிர்ந்து கொள்வதில் நான் திருப்தியடைகின்றேன்.

நவக்கிரகங்களில் சனீஸ்வரனுக்கு முதன்மை உண்டு. சோதிடர்களின் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு சனிக்கிழமைகளில் நாம் விரதமிருக்கிறோம். சிறப்பாக புரட்டாதி மாத சனிக்கிழமை விரதத்தை நாம் மறப்பதில்லை. இந்த நாளில் சிவன் கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்து சனீஸ்வரனுக்கும் அர்ச்சனை செய்து, எள்ளுப் பொட்டளி எரித்து, காகத்துக்கு அமுது படைத்து வருவது எமது வழக்கமும் பழக்கமும் ஆகும். புரட்டாதி மாதம் இந்த நியமத்துக்கு ஒதுக்கப்பட்ட மாதமாகும். நவக்கிரகங்களில் சக்தி வாய்ந்தவர் சனி பகவானே. எல்லாம் வல்ல சிவனுடைய கடாட்சத்தினால் இது அவருக்குக் கிடைத்த வரமாகும். பன்னிரண்டு இராசிகளையும் ஒருமுறை சுற்றிவர சனிபகவான் முப்பது வருடங்கள் எடுக்கிறார். இந்த நகர்வில் ஏழரைச்சனி, அட்டமத்துச்சனி என்று வருகின்ற காலத்தை நாம் அச்சத்தோடு அணுகுகிறோம். இரண்டரை வருடங்கள் சனீஸ்வரன் ஒரு வீட்டில் சஞ்சரிக்கிறார். மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனு, மகரம், கும்பம், மீனம் என்பன பன்னிரண்டு இராசிகளாகும். தற்பொழுது சனிபகவான் கர்க்கடக இராசியில் சஞ்சரித்திருக்கிறார். இந்த சஞ்சரிப்பின்படி மிருகசீரிடம் பின்னரை திருவாதிரை புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு ஏழரைச்சனி என்று சோதிடர்கள் சொல்வர். மேலும் கும்பராசிக்காரர்களுக்கு அதாவது அவிட்டம் பின்னரை சதயம், பூரட்டாதி முன்முக்கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தற்போது அட்டமத்துச்சனி என்று சோதிடர்கள் கூறுவர். மேலும் மூன்று, ஆறு பன்னிரண்டு என்னும் இராசிகளில் பிறந்தவர்களுக்கு ஆட்சியும் உச்சமும் பெற்று தோஷம் குறையும் என்பதும் எமது நம்பிக்கை. வாசகர்களின் பார்வைக்கு எனது நவக்கிரக நிலையைச் சமர்ப்பிக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| செவ் 8 | 9 | சந் 10 | 11 |
| 7 | மிருகசீரிடம் 2ம்-கால் | | ராகு 12 |
| கேது 6 | | | லக் 1 |
| சூரியன் புத, வீ | சுக் 4 | சனி 3 | 2 |

எனவே சனீஸ்வரனுடைய கடாட்சம் என்னை இந்த நிலைக்கு வைத்து விட்டதை மறக்க முடியாது. இதற்குரிய நன்றிக் கடனாக நளமகாராசனுடைய திருக்கதையை நளவெண்பாவில் புகழேந்திப் புலவர் பாடியபடி அச்சிட்டு எனது எண்பத்தோராவது பிறந்த நாளுக்கு வெளியிட விரும்பியுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

## சித்தர்களின் மஹிமை

ஹடயோகி ஒருவர் ஒரு மகானிடம் சென்று தனக்கு ஆகாயத்தில் பறக்கும் சக்தியிருக்கிறது என்று சொன்னார். பூமிக்கடியில் தன்னைப் புதைத்து கொண்டு பலகாலம் உயிர் வாழும் சக்தி இருக்கிறதென்று கூறினார். தண்ணீரில் நடந்து காட்டமுடியும் என்று பெருமைப்பட்டான். இது போன்று சித்து வித்தைகள் பல தெரியும் என்று கூறினான்.

இதைக் கண்டு ஆச்சரியப்படாமல் அந்த மகான் அப்பா பக்ஷிகள் ஆகாயத்தில் பறக்கின்றன. புழுக்கள் பூமியில் அடியில் பல காலம் வாழ்கின்றன. மீன்கள் நீரில் தாராளமாகத் துள்ளித் திரிகின்றன. இந்த மாதிரி ஜந்துகளைப் போல நடப்பதனால் என்ன பயன்? அதற்காக உன் தவத்தை வீணாக்குவதா? கடவுளைப் போல நடக்க முயற்சி செய். கருணை, தயை, அன்பு, போன்ற குணங்களை வளர்த்துக்கொள். அப்போது நீ மனித நிலையிலிருந்து உயர்ந்து தெய்வமாகிறாய் மனித நிலையிலிருந்து விலங்கு நிலைக்குச் செல்வது சித்தி அல்ல மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்குச் செல்வது தான் சித்திகளின் மஹிமை.

- ஒரு மஹான்

## நவராத்திரி காலங்களில் பாராயணம் செய்து சர்வமங்கலம் பெறலாம்.

ஓம் ஆதி சத்திஜனனி மாத
பஞ்ச க்ஷகி அபயங்கரி
பஞ்ச பூதமயி பஞ்ச பிராணமயி
பஞ்ச பூதஸர்வரூபிணி
பஞ்ச வஸ்த ஸ்வரூணி
பஞ்ச தத்வ மஹேஸ்வரி
ஓம் நீதீய சுபஹரி நிர்மலாந்தரக்ஷகி
பரப்தம்காரணி புண்ய சிகாமணி
ஓம் கருணாகடாக்ஷணி கங்காதேவி நமோத்துமே


உங்கள் அபிமான "அருள்ஒளி" கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்:
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,
கோவில் வீதி,
நல்லூர்.

# மன அமைதியைப் பெற பழகிக்கொள்வோம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

செல்வத்துள் செல்வம் எது? என்ற வினா காலந்தோறும் எழுப்பப்பட்டு வந்த வினாவே தான். காலம், நேரம், சந்தர்ப்பம், சூழ்நிலை என்பவற்றிற்கேற்ப, பல்வேறு விடைகளும் அளிக்கப்பட்டு வந்தன. பணம் என்றும் பண்டம் என்றும், கல்வி என்றும், செவிச்செல்வம் என்றும் பலவாறு கூறப்பட்டன. ஆனால் இன்று மனச்சாந்தியே செல்வத்துள் செல்வமாக இருப்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். மனச்சாந்திக்குத்தான் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. யாரைக் கேட்டாலும், சாந்தி இல்லை, அமைதி இல்லை, நிம்மதி இல்லை என்றுதான் கூறுகின்றனர். புறச் சாந்தியிலும் அகச் சாந்தியே முக்கியம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது போல, அகத்தில் சாந்தி இருந்தால் தான் புறத்திலும் இருக்கும்.

நம் முன்னோர்கள் சமயம் என்ற ஒன்றை ஏற்படுத்தியமை வீணுக்கல்ல. சமயத்தின் மூலம் ஒவ்வொருவர் மனதிலும் சாந்தி, சமாதானம், நிம்மதி, என்பவற்றை நிலைநிறுத்த முடியும், என நம்பினர். சமய நெறிமுறைகளை ஒழுங்காக அனுட்டிப்பதன் மூலம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தனர். இன்று பெரும்பாலும் சமய நெறிமுறைகள் வாழ்வில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அதனால் மனித வாழ்வில் நிம்மதியும் பறிபோகிறது.

மன அடக்கம், புலனடக்கம் என்பவற்றின் மூலம் பெறப்படும் சாந்தி நித்தியமானது. தியானம், சமய வாழ்வு என்பன மன அடக்கத்தையும் புலனடக்கத்தையும் ஏற்படுத்த உதவுகின்றன. மனத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதனால் மனத்தைச் சாந்தப்படுத்த முடியும். மனத்தில் தோன்றுகின்ற உணர்ச்சிகளில் பெரும்பாலானவை, தீய உணர்ச்சிகளே. அதனாலும் நிம்மதி குலைகிறது. சமய நெறியில் வாழ்வதன் மூலம் தீய உணர்ச்சிகள் தோன்றாமல் தடுக்க முடியும். அதே வேளை, உணர்ச்சிகளை அறிவினாலும் அடக்க இயலும். பகுத்தறிவு என்ற பெயரில் எப்படி எப்படியெல்லாம் நடந்து கொள்கிறோம். ஆனால், அந்தப் பகுத்தறிவு தீய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதாக இல்லை. தூய நல்லறிவினாலேயே மனத்தில் தோன்றும் எல்லையற்ற தீய உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும். உணர்ச்சிகளைத் தூய அறிவினால் வெல்பவர்களே உத்தமர்கள் ஆவர்.

மனச்சாந்தி குலைவதற்குப் பல காரணிகள் உள்ளன. அழுக்காறு, அவா, வெகுளி, வெறுப்பு, இன்னாச்சொல், என்பவற்றால் நாம் ஆளப்படும்போது, எமது சாந்தி பழுதுபட்டு விடுகிறது. எமது நிம்மதிக் குலைவுக்கு முதலில் நாமே காரணம் என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

பிறர்மீது பொறாமை கொள்ளக்கூடாது. பிறர் பொருளில் இச்சை கொள்ளல் ஆகாது; பிறர் மீது கோபங்கொள்ளல் கூடாது. பிறருடன் பகைத்தல் ஆகாது. பிறருடன் கடுஞ்சொல் பேசக்கூடாது. இவ்வாறு நடந்து கொள்ளப் பழகிக் கொள்வோமேயானால், நாம் நிம்மதியாக வாழலாம். கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுத கதைபோல, நிம்மதியைப்

பெறுவதற்குரிய வழிமுறைகளை எம்மிடத்தில் வைத்துக் கொண்டு வெளியில் அதனைத் தேடி அலைகின்றோம்.

நிம்மதியைப் பாதிக்கும் ஒரு விஷயத்தை எடுத்துக் கொள்வோம். அதாவது கோபம். கோபம் ஒரு போதை. அதற்கு அடிமையாகிவிட்டால் எமது பகுத்தறிவு பறிபோய்விடும். என்ன பேசுவது, என்ன செய்வது என்று எதுவுமே தெரியாமல் இருக்கும். அதனால் எத்தனையோ கெடுதிகள்; தீமைகள் ஏற்படுகின்றன. காலையில் கோபத்துடன் வாழ்க்கையை ஆரம்பித்து பகல் முழுவதும் கோபத்துடனேயே உறவாடி, வாழ்க்கையை நடத்தி, இரவில் கோபத்துடனேயே படுக்கைக்குப்போய், தூக்கத்தையும் கெடுத்துக் கொள்ளும் பலரை நாம் காண்கின்றோம். அவர்கள் தூக்கத்தை மட்டுமா, கெடுத்துக் கொள்கிறார்கள். வாழ்க்கையையும் அல்லவா கெடுத்துக் கொள்கிறார்கள். இப்பொழுது கோபத்தை எவ்வாறு தவிர்ப்பது அல்லது தணிப்பது என்னும் வினா எழுகிறது. பெரியவர்கள் அதற்கும் வழிகூறியிருக்கிறார்கள்.

முதலில் கோபம் வருகிறதென்று தெரிந்ததும், ஒரு தம்ளர் தண்ணீர் அருந்தவேண்டும். அதன் பின் முடியுமானால் முகம் பார்க்கும் கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பார்க்கவேண்டும். அமைதியாகப் படுத்துக் கொள்ளலாம் அல்லது கோபம் ஏற்பட்ட இடத்திலிருந்து விலகி வேறிடத்திற்கு நடந்து செல்லலாம். கடவுளின் நாமங்களைச் செபிப்பதோடு, தோத்திரங்களையும் மனமுருகிப் பாடவேண்டும். நல்ல சிந்தனைகளை மனதில் வரவழைக்க வேண்டும். ஏதாவது நற்கருமங்கள், சேவைகள் என்பவற்றில் ஈடுபட்டு, பொறிபுலன்களை நன்மையில் நாட்டமுறச் செய்தல் அவசியம். "மௌனம் கலகநாஸ்தி" என்பர். மௌனமாக இருத்தல் மிக நன்று ஒரு கைதட்டி ஓசை எழாது கடவுளிடம் சகலதையும் ஒப்படைத்துவிட்டு கடவுட் சிந்தனையோடு சும்மா இருத்தலே மிக உயர்ந்த சாதனை என்கிறது சைவநீதி.


"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"


# சிவபூமி கண்தானச் சபை

தானங்களில் சிறந்த தானமான கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்

உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு

ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே



இப்புண்ணிய காரியத்துக்கு

ஒப்புதல் தாருங்கள்.



**தொடர்புகளுக்கு:**

**ஆறு.திருமுருகன்**

தொலைபேசி

**021-222 6550**

**கண் வைத்திய நிபுணர்கள்:**

**Dr. ச. குகதாசன், 021-222 3645**

**Dr. சிவந்தா, 021-222 3149**

யாழ்.போதனா வைத்தியசாலை

# சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

க.சிவசங்கரநாதன்

சிதம்பர விநாயகர் ஆலயம், சரசாலை

மௌனம் மூன்று வகைப்படும் உடம்பு அசைவற்றுக் கிடப்பதைக் காட்ட மௌனம் என்பர். வாய் பேசாது இருப்பது வாய் மௌனம். மனம் ஓடாமல் நிற்பது மனோ மௌனம். இறைவனுடைய திருவருளில் ஈடுபட்ட யோகியர்கள் மெல்லமெல்ல ஒவ்வொரு மௌனமாகச் சாதித்துக்கொண்டு வருவார்கள். கடைசியில் மனோ மௌனமாகிய மனோலயம் சித்தித்த பிறகு அந்த நிலையிலே அசைவின்றி நிற்பார்கள். யோகம் என்பதே சித்த விருத்தியற்று நிற்றல் யோகமென்பது சித்தவிருத்தியின் நிரோதம் என்று பதஞ்சலி யோக சூத்திரம் சொல்லுகிறது.

யோகம் எட்டு வகைப்படும் இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்பன அவை. சமாதி என்பது புறக்காரணங்களும் அகக் காரணங்களும் அடங்கி நிற்கும் நிலை அதற்கு முன் அமைய வேண்டியவை. இயமம் முதலிய ஏழும் தாரணையென்பது தன் உள்ளத்தே பற்றிய பொருள் அசைவின்றி நிற்கும் படிசெய்தல். இது எளிதில் யாவர்க்கும் கைகூடுவதரிது. நம்முடைய எல்லையற்ற அன்புக்குரியவர் ஒருவரை நினைக்கிறோம். அவருடைய உருவம் நம் அகத்தே தெளிவாக தெரியாது. கனவில் உருவங்கள் தெளிவாக தெரிகின்றன. ஆனால் அந்தக் கனவு நம் விருப்பப்படி வருவதில்லை. விழித்திருக்கும் போது ஒன்றை நினைத்தால் அது கனவிலே காணும் பொருளைப் போலத் தெளிவாகத் காண்பதற்குப் பல காலம் பயிற்சி செய்யவேண்டும். நாம் எண்ணும் உருவை மனத்திலே தரிசிக்க வேண்டும் நிலையாக நிற்கவேண்டும் அதைத் தாரணை என்று சொல்வார்கள். சிவபெருமானுடைய திருவுருவத்தை மனத்திலே வைத்துப் பிற நினைவுகள் வராமல் விலக்கி நிஷ்டாபரர்களாக இருக்கும் சிவயோகியர்களுக்குத் தாரணை கைகூடும். பின்பு வேறு எந்த வகையான இடையீட்டாலும் அது மாறாமல் நிற்கும் அந்தக் காட்சியிலே உறைந்து நிற்பதே தியானம். அப்பால் எல்லாம் மறந்து இன்புறல் சமாதி.

தாரணை கைகூடிய சிவயோகியரைச் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் என்று சுந்தரர் என்று பாடினார். அவர்கள் ஆதாரங்கள் ஐந்திலும் உள்ள பஞ்சமூர்த்திகளின் பதங்களைக் கடந்து அப்பால் ஆறாவது ஆதாரமும் தாண்டிப் பூரண மெய்ச்சோதியாகப் பொலியும் துவாத சாந்த நிலையில் மனத்தை நிறுத்துவார்கள் அவர்களுடைய சித்தம் சிதறாமல் ஆடாமல் அடையாமல் விருத்தி அடங்கிக் கிடக்கும்.

சித்தத்தை சிவன்பாலே வைத்தாராகிய தொகையடியார்களை நாமும் போற்றி வழிபடுவோமாக.

# தாயும் பெண்ணே தாரமும் பெண்ணே

திருப்பதி இளம்பிறையாளன் அவர்கள்

ஒன்றே குலம் ஒருவனே தேனென்ற திருமூலர் வாக்கு இன்று நடைமுறையில் என்னாச்சு. ஆயிரத்துக்கு மேற்பட்ட தெய்வ வழிபாடு இந்துத்துவத்திற் தினந்தினம் வளர்கின்றது சாதிவியாதியும் இவ்வண்ணமே. நான்காவது வர்ணக்காரர் சிந்திப்பார்களாக. இ∴தே போல நூல்களும் பல்லாயிரம் எமக்கு முடியுமா. நால்வேதம், ஆறங்கப்பிரனம் தானத்திரேயம் எல்லாமே புரியாத மொழியில் நம்சைவம் பற்றி ஒரு அடிப்படையறிவு எல்லோர்க்கும் இருக்க வேண்டும். ஆக நம்மவரைக் கொஞ்சம் கொஞ்சமாவது நம்மவர் ஆக்கவேண்டும். எனக்காஞ்சி முனிவர் கூறியுள்ளார். ஆகப் பாபா இரத்தினகசிதமாக இப்படிப் பேசியுள்ளார்.

ஒன்றேகுலம் - அதுவே மனித குலம்
ஒன்றே மதம் - அதுவே அன்பு மதம்
ஒன்றே மொழி - அதுவே இதய மொழி
ஒன்றே தெய்வம் - அதுவே எங்கும் நிறைந்தது.

மேதகு மனித இனம் இருவேறியற்கையுடையது. ஒன்று ஆண், மற்றது பெண். அன்பின் ஐந்திணை வகுத்த இலக்கணகாரர் திணை பால் பற்றி விளக்கினர். திணையில் உயர்திணை அ∴றிணையென இரண்டு. மக்கள் தேவர் நரகர் உயர்திணை. அல்லார் அ∴றிணை. உயர்திணையில் மனிதம் அடங்குகிறது. திணையை சாதி என்பர். இதை நுண்ணிதாய்ப் பார்த்தால் உயர்திணையில் ஆண்பால் பெண்பால் பலர்பால் மூன்று ஆக ஆண் பெண்ணமைப்பே வித்தியாசமானது. அ∴றிணைப் பெண்ணும் ஆணும் ஒன்றன் பால் பலவின்பாலுள் அடங்கும். ஆண்பூ, பெண்பூ, ஆண்பனை, பெண்பனை, சேவல், பேடு, காளை, கிடாரியென்ற வழக்காறு ஒப்புநோக்கத்தக்கது. எனவே பெண்ணினம் இன்றேற் பரம்பரையே இல்லை. இணைவிழைச்சு என்ற கீழ்க்கணக்கில் வரும் மரபு. பெண்ணாண் சேர்க்கையை நாசூக்காகக் குறிப்பிடுகிறது. இப்பெண்ணின் பெருமதி பெருமை சிந்திக்கற்பாற்று ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழ்வது இல்லறம் இருபெண்களோ, இரு ஆண்களோ இயைவது இயற்கையன்று. இந்நெறிப்பாட்டில் உலகியலை நுண்ணிதின் ஒரும்போது பெண்ணின்றி ஆணும் இல்லை. ஆணின்றிப் பெண்ணினமும் இல்லை. தந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி வாழ்ந்ததும் இந்நாடேயெனப் பாடினார் பாரதி. தாய்நாடு, தாய்மொழி, தாய்க்குலம், தங்கை மாதா, பூமித்தாய் போன்ற வழக்காற்றில் தாய்மை பளீச்சிடுகின்றது. தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கூப்பிட்டி பாப்பா என்பார் பாரதி. புரட்சிக் கவிஞனின் முதற்பாடலே எங்கெங்கு காணிலும் சக்தியடா ஏழுகடல் அவள் வண்ணமெடா எனத்துவங்குகின்றது. பிற்காலத்திலே பெண் கல்வியின் பெறுமானத்தைத் தமிழகச் சமுதாயத்துக்கு எடுத்துச் சொன்னவரும் அவரே.

நமது சுற்றுச்சூழலை அவதானிப்பின் பெண்மயமாகவே தென்படுகின்றமை மலையிலக்கு. தாய், தாயின் தாய், அப்பாவின் தாய், உடன்பிறப்புகளான அக்கா தங்கச்சி, மாமி, மச்சாள், பெரியம்மா, சின்னம்மா, பெண்மகாக்கள் எல்லாமே பெண்குலக் கொடிகளே. பேதா பேதமற்ற இவ்வுண்மையை மகாகவி பொன்னெழுத்துக்களிலே பொறித்துள்ளான்.

பெண்டாட்டி தனையடிமைப் படுத்த வேண்டிப்
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?
"கண்டார்க்கு நகைப் பென்னும் உலக வாழ்க்கை
காதலெனும் கதையினுடைக் குழப்பமன்றோ?

உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவளென்றறியீரோ? உணர்ச்சி கெட்டீர்
பண்டாய்ச்சி ஔவை "அன்னையும் பிதாவும்
பாரிடை முன்னறி தெய்வம்" என்றாள் அன்றோ?

தாய்க்குமேல் இங்கேயோர் தெய்வமுண்டோ?
தாய் பெண்ணே யல்லளோ? தமக்கை தங்கை
வாய்க்கும் பெண்மக வெல்லாம் பெண்ணே யன்றோ?
மனைவியொருத் தியையடிமைப்படுத்த வேண்டித்
தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?
'தாயைப் போல பிள்ளை என்று முன்னோர்
வாக்குளதன்றோ பெண்மை அடிமை யுற்றால்
மக்க ளெலாம் அடிமையுறல் வியப்பொன்றோமோ?

வீட்டிலுள்ள பழக்கமே நாட்டி லுண்டாம்
வீட்டினிலே தனக்கடிமை பிறராம் என்பான்
நாட்டினிலே... ... ...
நாடோறு முயன்றிடுவான் நலிந்து சாவான்
காட்டிலுள்ள பறவைகள் போல் வாழ்வோம் அப்பா?
காதலிங்கே உண்டாயிற கவலை யில்லை
பாட்டினியே காதலைநான் பாடவேண்டிப்
பரமசிவன் பாதமலர்பணிகின் றேனே.

பாரதியார் கவிதைகள் சுயசரிதை 46, 47, 48.

பெண்கள் நாட்டின் கண்கள். தாயும், மனைவியும் ஒவ்வொரு ஆண்களின் கண்ணெனப்படும். மாதர் தம்மை இழிவு செய்த மடமை போயிற்று. களத்திரம் நம் வாழ்வின் பற்றுக்கோடு தாயோடறுசுவைபோம், பொற்றாலியோடெவையும் போம் என்ற உண்மை எவ்வளவு பொருண்மியமானது தாய் கையிற் சோறும் தனிப் படுக்கையும் உயர்ந்ததுதான். தாயின் பின் குடும்பத்தையே பொறுப்போடு முன்னெடுப்பவள் மனைவியன்றோ. அவளும் தாய்மையால் மெலிந்தவளும் பொலிந்தவளுமாம். பௌத்தம், சமணம், சைவம் நிலையாமையை அடிப்படை யாகக் கொண்டது. நீதிநூற்றொகுதிகள். குறள் நாலடியார் திருமந்திரம் என்பன யாக்கை நிலையாமை. இளமை நிலையாமை செல்வநிலையாமை பற்றிப் பேசுகின்றன. இளமை நிலையாமையைத் துல்லியமாய் விளக்க நாலடியார் தாயையே மையமாக்கிப் பாடிய பாடலின் நுண் பொருள் உளம் கொளத்தக்கது.

எனக்குத்தா யாகியாள் என்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள் - தனக்குத்தாய்
ஆகியவளும் அதுவானால் தாய்த்தாய்க் கொண்(டு)
ஏகும் அளித்திவ் வுலகு.

அளித்து-எளிமையுடையது. நாலடியார் 16

இதன் பொருள்:

என்னைப் பெற்றெடுத்த அன்னையாகியவள் என்னை இவ்வுலகில் விடுத்துத் தனக்கொரு தாயை விரும்பிச் சென்றாள். அவ்வாறானால் தாய்த்தாவித் தாவித் தேடிச் செல்லும் இவ்வுலகின் இயல்பை எண்ணிப் பார்த்தால் இரங்கத்தக்கதே.

மனைக்குரியவள் மனைவி. பங்குக்குரியவள் பாரியார் இல்லறத்துக்குத் துணையாய் இருப்பவள் துணைவி. மக்கட் செல்வத்தாற் பொலிந்தவள் புத்திரவதி. கற்பும் பொற்பும் நிறைந்தவள் பெண்ணிற் பெருந்தக்காள். வரவுக்கேற்ற செலவு செய்பவள் வாழ்க்கைத்துணை. என்ற பொய்யாமொழியார் பிள்ளைகளோடு பின்னித்தாயின் மகத்துவத்தை மூன்று குறட்பாக்களிலே எடுத்துப் பேசுகின்றார்.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் குறள் 69.

தான் பெற்ற பிள்ளை ஆண்குழந்தையெனக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சியடைந்தவள் அன்னை. அம்மகன் கல்விகற்று எல்லாரும் அவனைக் கல்விமான் (சான்றோன்) எனப் பேசுவதையறிந்து பெற்ற வேளையிலும் பெரிது உவப்பவள் அன்னை

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி

களி-கள் குறள் 923

பெற்றவள் தன்மைந்தன் என்னகுற்றம் செய்தாலும் பொறுப்பாள் அவன் ஒருகுடிகாரன் (சூதாடி) என்று பிறர் சொல்ல எள்ளளவும் பொறுக்கமாட்டாள். அவனைக் கண்டித்துத் தண்டித்துத் திருத்துவாள். ஆக, கள்ளுண்ணல் வெறுக்கத்தக்கது என்பது பெற்றாம்

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை குறள் 656

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் தன்னைப் பயந்தாளது பசியை வறுமையாற் கண்டு இரங்கும் தன்மையனாயினும் சான்றோர் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யாதொழிக. தாயைப்பசி வாட்டும்வேளையிலும் அப்பசியைத் தீர்ப்பதற்குப் பெரியோர் விரும்பாத செயல்களில் ஈடுபடக்கூடாதென்பது இக்குறள் தரும் பொருளாகும். எந்தத்தாயும் தம்மக்கள் நல்ல பழக்க வழக்க ஒழுக்கம் உள்ளவர்களாக வாழ்வதையே விரும்புவர். நற்றாயும் பிழை குறிக்கக் கண்டேன் என வள்ளலார் தன்னைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். பிள்ளைகள் நடத்தை தாயையே தாக்கும். இவனை பெற்றதாய் யார் என்ற வினா எழாமற் பிள்ளைகள் தம்மை செந்நெறிக்கு வழிப்படுத்த வேண்டும். பல தாயர் என் பெயரைக் கெடுக்காதைமோனை கைம்பெண்டாடிச்சி வளர்த்தபிள்ளையென்ற அவப்பெயர் வாங்கித் தராதேயெனப் பிள்ளைகள் வழிமாறிப் போம் போது சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம்.

பெரிய விழாக்களிலே தேர்த்திருவிழாக்களிலே மங்களகரமான கல்யாண வைபவங்களிலே பெண்ணினம் அலங்கார பூஜிதைகளாக வந்திருப்பதைக்கண்டு மனம் பூரிக்கிறோம். இப்பெண்ணினத்தின் பெருமை சொல்லுக்கடங்காதது. இவ்வண்ணமே அவர்கள் கல்வி கற்று, பட்டம் பெற்று, டாக்டர்களாக, கணக்காளர்களாக, எஞ்சினியர்களாக, ஆசிரியர்களாக உயர்வதைப் பார்த்துச் சமுதாயமே சந்தோஷிக்கிறது. அவர்கள் பொறுமை, அடக்கம், சேவை, அமைதி, கடமையுணர்வு நிறைந்த குணவதிகளாக இருப்பதே மனிதத்துக்குக்கிடைத்த மேன்மையும் வெற்றியுமாம்.

இப்படியான பெண்ணினத்தின் வளர்ச்சிக்காக உயர்ச்சிக்காக உழைக்கும் தமையன்மார், தம்பிமார், மாமன்மார், நம் மண்ணிலே நிறைய இருக்கின்றனர். எத்தனையோ ஆண் சகோதரர்கள் விவாகம் செய்யாமல் இருந்தே சேவையாற்றுவதும் நம்மினப் பெருமையே. இதை வள்ளுவனார் ஆளுமை என்கின்றார்

நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
நல்லாண்மை ஆக்கிக் கொளல்

ஆண்மை-ஆளுந்தன்மை குறள் 1026

இது பெண்களுக்கும் ஆண்களுக்கும் இன்றியமையாதது எனலாம். இதுவரை பெண்ணினத்தின் பெருமையையுப் பொதுவாகவும், தாய்மை, மனைவி பற்றிச் சிறப்பாகவும் கவனித்தோம். தாயை அம்மாவென அள்ளூற அழைக்கிறோம். பெண் குழந்தைகளைக் கூட நாம் அம்மாவெனக் கட்டியணைக்கின்றோம். விவேகானந்தர் அமெரிக்காவிற் பெண்களைத் தாய்மார்களே என விளித்தமை கவனத்துக்குரியது. அம்மா என அழைப்பது ஒரு தகைசான்ற ஆர்வச்சொல் எனக்குலசேகரர் குறிப்பிடுகின்றார். இராமன் காடேகி விட்டான் அங்கே தன்மகன் இராகவன் எப்படியெல்லாம் கஷ்டப்படுவான். தன் தாயை அம்மா அம்மா என்று இவ்வரண்மனையிலே அடிக்கடி அழைப்பதை நான் கேட்பேனே. அவ்வினிய அழைப்பின் எதிரொலி என் காதை விட்டு நெடுந்தூரம் போய்விட்டதேயென்ற மனஉராசம் பின்வரும் பாடலியே ஒலிக்கக் காணலாம்.

அம்மா வென் றுகந்தழைக்கும் ஆர்வச்சொல்
கேளாதே அணிசேர் மார்வம்,
எம்மார்வத் திடையழுந்தத் தழுவாதே
முழுசாதே மோவாதுச்சி
கைம்மாவின் நடையன்ன மென்னடையும்
கமலம்போல் முகமும் காணாது
எம்மானை யென்மகனை யிழந்திட்ட
இழிதகையே னிருக்கின் றேனே!

பெருமாள் திருமொழி 9:6

சமுதாய அமைப்பிற் பெண்ணின் பெருமையை மதித்து தாயையும், தாரத்தையும், போற்றி ஆண்களோடு பெண்களும் சமமாக வாழ்வமெந்த நாட்டிலும்.

# மனோவலிமையும் அதன் வளர்ச்சியும்

செல்வி ஷாவித்ரி அவர்கள்
யாழ்-மருத்துவபீடம்.

உலகில் உள்ள அனைவரும் வாழ்க்கையில் விரும்பும் பொருள் வெற்றி. நாம் ஆன்மீக ஒளியையோ அல்லது எந்தவொரு துறையையோ நாடும் பொழுது அதில் வெற்றிபெற வேண்டும் என்றே முனைப்பாக இருக்கிறோம். நாம் தோல்வியுற விரும்புவதில்லை. அதேநேரம் வெற்றி எல்லோரையும் சென்றடைவதுமில்லை. வாழ்க்கையில் மிகச்சில மக்களே வெற்றி பெறுகின்றனர். பலர் ஓரளவு வெற்றியடைகின்றனர். இன்னும் சிலர் தொடர்ச்சியான தோல்விகளைத் தழுவி மனமுடைந்து போகின்றனர்.

மனித வாழ்க்கையிலே வெற்றி, தோல்வி என்பன இருகூறுகளாத் தோன்றிய போதிலும் ஒவ்வொரு விடயத்திலும் ஒரு பொதுக்கூறு சம்பந்தப்பட்டுள்ளது. அது தான் மனோசக்தி, மனோவலிமை, இம்மனோ சக்தியைக் குழந்தைப் பருவத்திலிருந்தே வளரச் செய்யப்படவேண்டும். கல்வியின் ஒரு பகுதியாக இது ஊட்டப்படவேண்டும். மனோசக்தியைக் குழந்தைப் பருவத்திலிருந்து பெற இயலாதவர்கள் எந்தப் பருவத்தில் என்றாலும் வளர்த்தெடுக்க முயற்சிக்க வேண்டும். இப்பயிற்சியைப் பெறுவதன் மூலம் தனிமனித வாழ்விலும், சமுதாய வாழ்விலும் மிக உயர்ந்த மேலான மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஒருவனிற்கு மனோவலிமை இல்லாத பட்சத்தில் அவனுடைய எல்லாத் திறன்களும் குணநலன்களும் முயற்சிகளும் பயனற்றதாகி விடும்.

மனோ சக்தி என்றால் என்ன என்பதை ஆராய்வோமானால் நாம் தேர்ந்து எடுக்கப்பட்ட செயல்களை உறுதியான முறையில் செய்யவும், தேர்ந்து எடுக்கப்படாத செயல்களை உறுதியான முறையில் தவிர்க்கவும் உதவும் கருவியாக உள்ளது. சாதகமான, சாதகமற்ற எல்லாச் சூழ்நிலையிலும் எந்த சக்தி நம்மைச் சரியானதைச் செய்ய வைக்கிறதோ தவறானவை என்று அறிந்து செய்யவிடாமல் தடுக்கிறதோ அதுவே அந்த மனத்தின் சக்தி நிலையாகும். ஒருவன் நல்லவனாகவோ உண்மையானவனாகவோ தூய்மையானவனாகவோ பலம் பொருந்தியவனாகவோ இருப்பதற்கு காலம் தாமதமாகி விட்டது என்று கூறமுடியாது. மனோ சக்தியின் வளர்ச்சியில் காலம் எப்போதும் குறுக்கே நிற்பதில்லை.

நாம் எக்கணத்திலும் உடைந்து போகக்கூடிய பலவீனமான நாணல்ல என்பதை எப்போது அறிந்து கொள்கின்றோமோ அப்போது தான் நமது மனத்தில் இருக்கும் உண்மைக்கு எதிரான மயக்கத்திலிருந்தும், பொய்த்தோற்றத்திலிருந்தும் விடுபட்டு உண்மையான சக்தியை, மனோவலிமையை வெளிப்படுத்த முடியும்.

எனவே மனோசக்தியை வளர்ப்பதற்கு உறுதியான நம்பிக்கை வைக்கவேண்டும். எம்முடைய முழு ஆன்மாவுடன் நாம் நேரான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை நம்பவேண்டும். எந்தவொன்றைப் பார்த்து சந்தேகப்படக்கூடாது. சொந்த ஆன்மாவின் மேல் எல்லா வல்லமையையும் கொண்டு நம்பிக்கை வைக்கவேண்டும். அப்போது தான் மனோசக்தி வீரியத்துடன் வளர்ச்சியடைகிறது. ஒருவர் நேர்மையுடன் செயற்படும் போது, அவனுள்ளே இருக்கும் ஆன்மாவின் செயற்பாடு அவனது மற்றைய எல்லாச் செயல்களையும் ஒழுங்குபடுத்துகின்றது.

எவனொருவன் சிந்தனையில் செயலில் நடத்தையில் தன்னைத்தானே ஒழுங்குபடுத்திக் கொள்கின்றானோ அல்லது ஒழுங்குபடுத்திக் கொள்ளத் தெரிந்து கொள்கிறானோ அவனது ஏனைய செயற்பாடுகள் எளிதாகிவிடும். "சரியான செயல்களை இப்பொழுதே செய்துவிடு" இதுவே நாம் நம் மனத்திற்கு ஒவ்வொரு நாளும் இடும் கட்டளையாக இருக்கவேண்டும். நம்மால் எது சரி எது பிழை என முடிவு செய்ய முடியாவிட்டால் குரு அல்லது பெரியோரை அணுகி ஆலோசனையைப் பெற்று அவர்களின் வழிகாட்டலின்படி நடக்க வேண்டும். இவ்வாற நாம் தினசரி வாழ்க்கையில் சுயபண்பாட்டைப் பேணுவதிலும் சுயமேம்பாட்டிலும் மற்றும் உடல், மன, ஆன்மீக நிலையிலும் தமது செயற்பாட்டைத் திட்டமிட்டு அதன் வழி செயற்பட வேண்டும்.

நமது மனோவலிமையை வளர்ப்பதற்குத் தோல்வியும் துன்பங்களும் தடைக்கல்லாக அமைந்து விடக்கூடாது. தொடர்ந்து வரும் துன்பங்களைக் கண்டு நம்பிக்கையிழந்து விடக்கூடாது. தோல்விகளை ஏற்றுக்கொண்டு அவற்றை வெற்றிப்பீடத்தை அடைவதற்கான படிக்கட்டுகளாக மாற்றவேண்டும். அந்தப் படிக்கட்டுகளைச் சரியான முறையில் உபயோகித்தால் மனோவளர்ச்சியின் உச்சக்கட்டத்தைச் சர்வ நிச்சயமாக அடையமுடியும்.

அத்துடன் மட்டுமல்லாது மற்றவர்கள் எங்களிற்குச் செய்கின்ற குற்றங்களையும், அவதூறுகளையும் பொறுப்போம். அத்தகைய செயற்பாடுகளை நாங்கள் மற்றவர்களிற்குச் செய்யாமல் இருப்போம். அப்போது தான் மனம் தூய்மையடையும் தூய்மையடைந்த மனதை இறைவன் என்றுமே காப்பாற்றுவார். அத்தகைய மனத்தினாலேயே அளப்பரிய காரியங்களைச் சாதிக்க முடிகின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மீக அளவில் உயர்ந்து நிற்கவேண்டும். ஒழுக்கத்தால் ஆன்மீக அளவில் உயரமாக இல்லாத எவரும், மற்றவர்களின் மதிப்பீட்டால் தங்களுடைய மனச்சாட்சிப்படி உயர்ந்து நிற்க முடியாது. ஆன்மீக அளவில் நாம் உயர்ந்து நிற்கும் போது அது உங்களை உயர்த்துவதோடு, அமைதியான உறுதியினை உங்களிற்கு அளிக்கின்றது. வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கமுடியாத மனஉறுதியைப்பெற்று விடுகின்றீர்கள். பிரபஞ்சத்தின் எல்லையற்ற தன்மையினைக் காலத்தின் முடிவில்லாமையை, மரியாதைகளிற்கு அப்பாற்பட்ட புனிதத்தை ஏதோ ஒரு ஆன்மீக வழியில் நீங்களும் அவற்றின் ஓர் அங்கம் என்பதை அறியும் போதே ஆன்மீக அளவில் உயர்ந்து நிற்கமுடியும்.

எனவே உண்மை தெரியாமல் உலக நியதிகள் புரியாமல் நொந்தும், வெறுத்தும், வேதனைப்பட்டதும் போதும், இனி சாதனையாளராகி காரியங்களைச் சாதிப்போம். இறை நம்பிக்கையும், மனஉறுதியும் எம்மை என்றும் வெற்றியாளர்களாக்கும்.

**சத்தியயுகத்தில் தியானத்தின் மூலமும்,**
**திரோதாயுகத்தில் யாகத்தின் மூலமும்,**
**துவாபர யுகத்தில் பூசையின் மூலமும்,**
**அடையப்பெற்ற நிலையினை, இறைநாமத்தை**
**உச்சரிப்பதன் மூலம் இக்கலியுகத்தில்**
**சுலபமாக அடைய முடியும்.** - மகாபாரதம்

சிறுவர் விருந்து

# அவர் மட்டும் செய்யலாமா?

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே அன்பு வாழ்த்து.

அன்பு வாழ்த்து! நன்றாகப் படிக்கிறீர்களா? நன்றாகப் படிக்கவேண்டும். நன்கு விளையாட வேண்டும். நாடு பயன்படும் வகையில் நல்லபடி வாழப் பழகவேண்டும். இப்படி நல்லவனாக வளர்ந்த ஒருவரின் கதையை இப்போது சொல்கிறேனே.

இந்தியாவிலே ஈஸ்வரசந்திர வித்தியாசாகர் என்று ஒருவர் இருந்தார். மிகவும் எளிமையான கிராமப் புறத்தில் பிறந்தவர். ஆனால் கல்வியில் மிகப் பெரியவர். அவர் பட்டப்படிப்புப் படிக்கும் போதும் கல்லூரி ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியப் பணிபுரிந்தபடியேதான் படித்தார். அப்படி அவர் படிப்பித்த சிறிய நகரில் ஒரு சிறிய குடும்பத்தினருடன் தங்கி இருந்தார். அந்தக் குடும்பம் ஒரு அப்பா, அம்மா, சிறுவன் ஒருவனைக் கொண்டது. அந்தக் குடும்பத்தினர் நமது வித்தியாசாகருக்குத் தங்க ஒரு அறையும் கொடுத்து உணவும் அளித்தனர். அவர் அந்தச் சிறுவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார்.

இரவு உணவின்போது ஒரு வாழைப்பழம் சாப்பிடுவது வித்தியாசாகருக்கு விருப்பம். எனவே; இரவு உணவின்போது அவருக்காக ஒரு வாழைப்பழமும் வைப்பார்கள். ஒரு முறை வாழைப்பழம் தட்டுப்பாடாக இருந்ததால் இரண்டு மூன்று நாள் இரவு உணவுடன் வாழைப்பழம் வைக்கவில்லை.

அடுத்து வந்த நாள் ஒன்றில் அந்த வீட்டுச் சிறுவன் தகப்பனாருடன் சந்தைக்குப் போனான். அங்கே நல்ல வாழைப்பழக் குலைகளை அவன் கண்டான். உடனே; தன் தகப்பனாரிடம் சொல்லி இரண்டு சீப்பு வாழைப்பழங்களை அதிக விலை கொடுத்து வாங்குவித்தான்.

அன்று இரவு சாப்பிடும்போது அந்தச் சிறுவன் ஆனந்தமாகச் சொன்னான். “ஐயா! இன்று நீங்கள் வேண்டிய அளவு வாழைப்பழம் சாப்பிடலாம். நிரம்ப எடுத்துக் கொள்ளுங்கள் உங்களுக்காகவே அப்பாவிடடே சொல்லி நிறைய வாழைப்பழம் வாங்கி வந்தேன்”

வித்தியாசாகர் அன்போடு சிறுவனைப் பார்த்து அன்று சந்தைக்குப்போன கதையெல்லாம் கேட்டு அறிந்தார். தமக்காக அதிகவிலை கொடுத்துப் பழம் வாங்கி வந்ததை அறிந்ததும் அவர் மனம் வருந்தினார்.

“தம்பி! நீ செய்தது தவறு! மிக அதிக விலை கொடுத்து தேவைக்கு அதிகமான பழங்களை வாங்கியிருக்கிறாய். இது வீண் செலவு கட்டாயமாக வாழைப்பழம் சாப்பிடவே வேண்டும் என்று நான் எண்ணியதில்லை. கிடைக்கும் போது சாப்பிடலாம். இப்படியெல்லாம் செலவு செய்து சாப்பிடவேண்டும் என்பதில்லை.”

என்று சொன்னவர் அன்று பழமே எடுத்துக் கொள்ளவில்லை சிறுவனுக்கோ கவலையாய்ப் போய்விட்டது. “ஐயா! தெரியாமல் செய்து விட்டேன் இனி இப்படிச் செய்யவேமாட்டேன் தயவு செய்து ஒரு பழமாவது வழமைபோலச் சாப்பிடுங்கோ!” என்று கெஞ்சிக்கேட்டு மன்றாடினான். ஆனால்; வித்தியாசாகரோ “இன்று மட்டுமல்ல, இனிமேல் எப்போதுமே நான் வாழைப்பழம் சாப்பிடப்போவதில்லை!” என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

சிறுவனுக்கு ஒரே கவலையாய்ப் போய்விட்டது. அவனது பெற்றோரும் வருந்தினர். ஆனால்; வித்தியாசாகர் தமது பிடிவாதத்தை விடவே இல்லை.

சில நாட்கள் கழிந்தன. விடுமுறை நாள் ஒன்று வந்தது. முன்புற விராந்தையில் சிறுவன் படிக்க அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தபடி இருந்தார் வித்தியாசகர். அப்போது காங்கிரஸ் தொண்டர் சிலர் வந்தனர். தேச நிர்மாணப் பணிகளுக்காக நிதிகேட்டுக் கொண்டு வந்த அவர்களைச் சற்று உட்காரும்படி சொன்ன வித்தியாசகர், தமது பெட்டியுள் இருக்கும் வங்கிக் கணக்குப் புத்தகத்தை எடுத்துவரும் படி சிறுவனிடம் சொன்னார். அவனும் எழுந்தோடிப்போய் அதனை எடுத்து வந்தான். அதை விரித்துத் தமது வங்கிச் சேமிப்பில் எவ்வளவு பணம் உள்ளது என்று கணக்குப்பார்த்த விததியாசகர் சில்லறையாக இருந்த சிறு தொகையைத் தவிர இருப்பில் இருந்த முழுத்தொகைக்கும் ஒரு ‘செக்’ எழுதிக் கையெழுத்துப் போட்டு வந்தவர்களிடம் பணிவோடு கொடுத்து அனுப்பினார்.

நடந்ததை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்த சிறுவன் வந்தவர்கள் போனபின் கேட்டான்; “ஐயா! அன்றைக்கு நான் கொஞ்சம் கூடவிலை கொடுத்து வாழைப்பழம் வாங்கியதை ஊதாரித்தனம் என்றீர்கள். கோபித்துக்கொண்டு பழமே சாப்பிடாமல் விட்டுவிட்டீர்கள். ஆனால் இன்றைக்கு வங்கியிலிருந்த முழுப்பணத்தையும் வந்தவர்களுக்குக் கொடுத்து விட்டீர்கள்! இது ஏன்? நீங்கள் செய்தது சரியா?” சிறுவன் கேட்டான்.

வித்தியாசாகர் சொன்னார்

“தம்பீ! அந்த வாழைப்பழம் நீ எனக்காக வாங்கியது. அதிக வருமானமில்லாத உன் தகப்பனாரை வற்புறுத்தி மேலதிக பணம்கொடுத்து அதனை நீ வாங்கியது பெரும் தவறு. அந்தத் தவறு நீ என்னிடம் வைத்துள்ள அன்பினால் செய்தது என்றாலும் அது என் பொருட்டு நீ மீண்டும் தவறு செய்யத் தூண்டக்கூடும். அது மட்டுமல்ல நாம் நமக்காக மிக அதிகச் செலவு செய்து தேவையற்ற பொருட்களை எல்லாம் வாங்கி அநுபவிக்க வேண்டும் என நினைப்பது மகாதவறு. ஆனால்; இன்று நான் கொடுத்தது நம் தாய்நாட்டு நன்மைக்கு. தாய் நாட்டுக்குப் பணிசெய்வது தாய்க்குப் பணிசெய்வது போலத்தான். தாய்க்குக் கொடுப்பதற்குக் கணக்கு வழக்கெல்லாம் பார்க்கக்கூடாது தெரியுமா? இப்போகூட ‘இன்றும் பெரியதொரு தொகையை என்னால் கொடுக்க முடியவில்லையே’ என்பதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது.”

சிறுவன் அவரது கருத்தை விளங்கிக் கொள்ள முயன்றவாறு இருந்தான்.

நாடகம்:

# தபோபலம்

திரு. சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

**காட்சி: 5**

**இடம்: உணவு வைப்பிடம்**

**வசிட்:** காமதேனு! இங்கே வருவாய்!

**சப:** (வந்து கொண்டே) மகரிஷியை மனமொழி மெய்யால் வணங்குகின்றேன்!!

**வசிட்:** விருந்தினர்களை வரவழைப்பதற்கு முன்பு விருந்து தயாராகி விட்டதா?

**சப:** முனிவருடைய முன்னறிவித்தல் பிரகாரம் பின்னை என்னாது எல்லாம் தயாராகி உள்ளன...! தங்கள் மனத்திற்கு எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று பாருங்கள் முனிவரே!

**வசிட்:** சபலை சமையலில் சளைத்தவள் அல்ல!

**சப:** இதோ, கருப்பஞ்சாறு.... தேன்... பொரி... போனகம்.... பானகம்..... வானகத்தவரும் வாய் ஊறுவர்.....

**வசிட்:** பார்த்தேன்.... ஆகா.....! எல்லாமே தித்திப்பாகவும் ருசி மிக்கதாகவும் விளங்கு கின்றன...! உன் கைவண்ணம் என்னென்பது! அப்பம்... வடை.... அன்னம்... சித்திரான்னம்...

**சப:** பாயாச வகைகள்.... நெய்... தயிர்.... பால் என்பன இவை!

**வசிட்:** தாளிதம் மிகப் பரமாதம்.. நாசியை ஊடறுத்துச் செல்லுகின்றது வாசனை...! நாவை வலிந்து இழுக்கின்றன... ரச வகைகள் கார சாரமுள்ளன. பட்சண வரிசையைப் பார்க்கக் கண் பதினாயிரம் போதாது....!

**சப:** முனிவரே...இது போதுமா? இல்லை இன்னும் வேண்டுமா?

**வசிட்:** வேண்டுவதும் வேண்டாமையும் விருந்தினருடைய விருப்பத்தில் தங்கியுள்ளது. சபலை.... மேலும் தேவை ஏற்பட்டால் தேடித் தருவாய் அல்லவா?

**சப:** முனிவருடைய வேண்டுகோளுக்கு முட்டுக்கட்டை வேறா...! கேட்கும் பொழுதில் கேட்பனவற்றைத் தேடித் தரச் சித்தமாக இருக்கின்றேன்!!

**வசிட்:** சபலையினுடைய திடசித்தம் இந்த அபலைக்கு அளிக்கும் ஆறுதல்...!

**(திரை)**

**காட்சி: 6**

**இடம்: விசுவாமித்திரர் தங்குமிடம்**

**வசிட்:** (வந்து) அரசகுருவே! எழுந்தருள வேண்டும். அதிதி பூசை ஆயத்தமாகக் காத்திருக்கின்றது!

**விசுவா:** முனிவருடைய அன்பும் ஆதரவும் இனியஉபசரிப்பும் என்னை மகிழ்விக்கின் றது! இதோ, வருகின்றேன்!!

வசிட்: மனைவி... மக்களையும் அழைத்து வாருங்கள்..!

விசுவா: நான் விருந்தினை ஏற்கும் வேளையில் அவர்களும் உடன் அமர்ந்து அருந்துவார்கள்!

வசிட்: இன சன பந்துக்கள்..?

விசுவா: வருவார்கள்!

வசிட்: பரிசனர்

விசுவா: புடை சூழ்ந்து போற்றி வருவர்!!

வசிட்: சேனைகள்?

விசுவா: சேர்ந்து வருவர்!

வசிட்: மந்திரிமார்கள்?

விசுவா: மறந்து இருக்க மாட்டார்கள்!!

வசிட்: புரோகிதர்கள்...

விசுவா: பொறுமையோடு வருவார்கள்....!

வசிட்: பிராம்மணர்....

விசுவா: பின்னே வருவார்கள்!

வசிட்: சேனாதிபதிகள்

விசுவா: சேவித்து வருவர்

வசிட்: வேலை ஆட்கள்....!

விசுவா: விரைந்து வருவார்கள்... வேண்டியவாறு அவர்களை எல்லாம் உரிய இடங்களில் உட்கார வையுங்கள்!!

வசிட்: எல்லாம் நெறிமுறை பிசகாமல் முறை முறை நிகழும்

விசுவா: முனிவருக்குத் தெரியாத முறைமையையா நான் மொழிவேன்!!

வசிட்: அரசே! தாங்கள் பெண்டிர் மக்களுடன் தனியான ஆசனத்தில் அமர்ந்து கொள்ளுங்கள்...

விசுவா: முனிவருடைய ஆஞ்ஞையை அனுசரிப்போம்

வசிட்: கால தாமதத்தையும் சிரம பரிகாரத்தையும் பொறுத்து விருந்து கொள்ளுங்கள்!

விசுவா: அதிதிகள் நாங்கள் ஆதரிப்பவர் தாங்கள் அமர்விடம் ஆச்சிரமம்.... தங்கள் பரோபகாரத்திற்குப் பங்கம் விளையாமல் பார்த்துக் கொள்ளுவோம்.

வசிட்: தயாள சிந்தை.....

**விசுவா:** விருந்துபசாரம் அரச வாழ்விற்கு அப்பாற்பட்டு விட்டது!

**வசிட்:** இது ஆரணிய ஆச்சிரமம்

**விசுவா:** அதனால் தான் அறைந்தேன்!!
(இருவரும் சிரிக்கின்றார்கள்)

**(திரை)**

**காட்சி: 7**

**இடம்: இளைப்பாற்று மண்டபம்**

**விசுவா:** வசிட்ட வள்ளலே!! தங்களுடைய தயவினாலும் விருந்தினாலும் எங்களை நன்கு மகிழ்வித்தீர்கள்!

**வசிட்:** தங்களின் உள்ளக் கணிப்பு எனக்கு அளவு கடந்த உவகையை ஊட்டுகின்றது!

**விசுவா:** தாங்கள் எல்லோராலும் பூசிக்கப்பட வேண்டிய பூசுரர். என்னையும் என்னைச் சார்ந்தவர்களையும் பொன்னைப் போலப் போற்றி விட்டீர்கள்!!

**வசிட்:** அரசே! அவரவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் யாவும் அவரவர்களுடைய தவத்தளவே ஆகும்.

**விசுவா:** உண்மை தான்... நானோ நாடாள் மன்னன்! தாங்களோ தவத்தை ஆள் முனிவர், தங்களைப் போன்ற பிரமஞானிகளால் நான் போற்றப்படுகின்றேன்... அது பூர்வ புண்ணியப் பலனே அன்றிப் புதிது அல்ல....

**வசிட்:** அரசே! அளவிற்கு அதிகமாகப் புகழ்வதும் போற்றுவதும்... சில வேளைகளில் தனது தளராத நிலையைத் தளர்த்தியும் விடலாம்.

**விசுவா:** முனிவர் மொழி முற்றும் உண்மை. இருந்தாலும்...

**வசிட்:** அரசர் எதுவோ சொல்ல விரும்புகின்றார்....

**விசுவா:** தான் நிற்கும் நிலையை உணரப் பெற்ற தங்களைப் போன்ற ஞானிகளுக்கு நம் புகழுரை அருகாகவும் வந்து அணையமாட்டாது. தங்களுடைய தவ பலத்தையும் மகிமையையும் நன்குணர்ந்தவன் ஆதலால் செய்தி ஒன்று செப்ப ஆசைப்படுகின்றேன்.

**வசிட்:** அரச பதவியிலும் உயர் தவ நிலையிலும் நிற்கும் தங்களைப் போன்றவர்களுடைய செய்தியைக் காது கொடுத்துக் கேட்பதற்கு முன்னை நன்றாகத் தவம் முயன்றிருக்க வேண்டும்.

**விசுவா:** தாங்கள் ஞானச் செல்வர்... அறிவின் ஊற்று!! சொல் வல்லபவம் வல்லவர். நிகரற்ற தங்களிடத்தில் நான் விடுக்கும் செய்தி.... பொருளாகவா அல்லது அருளாகவா அமையப் போகின்றது!

**வசிட்:** அதனால் தான் அரசே நானும் அதை அறியும் ஆவலுள்ளவனாக இருக்கின்றேன்!

**விசுவா:** தவ அரசே! எனது சொந்தமாக உள்ள பல இலட்சம் பசுக்களைப் பரிசிலாகத் தருவேன்

**வசிட்:** அதற்கு ஈடாக அரசர் என்னிடத்தில் என்னத்தை எதிர்பார்க்கின்றார்?

**விசுவா:** தங்களுடைய சபலையை எங்களுக்குத் தந்து உதவ வேண்டும்!

**வசிட்:** ஆஹா! காவலர் எனது காமதேனுவையையா காதலிக்கின்றார்.....!

**விசுவா:** ஆம் முனிவரே! காமதேனுவைக் கண்ட வேளையிலிருந்து அது என் கவனம் முழுவதையும் தன்பால் காந்தம் போன்று கவர்ந்து ஈர்க்கின்றது.!

**வசிட்:** தங்கள் கூற்று ஒருவழி உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் அரசே! சபலையைக் கேட்பது எனக்குக் கவலையைத் தருகின்றது.

**விசுவா:** தவ சிரேட்டரே! ஒரு தரம் என் கோரிக்கையை நன்றாகச் சிந்தனை செய்து பாருங்கள்!!

**வசிட்:** சிந்தனையின் பின்னரே வார்த்தையைச் சிந்தினேன்!!

**விசுவா:** அதி உத்தமமான பொருட்கள் அரசரைச் சார்ந்திருப்பது உத்தமத்தில் உத்தமம் அல்லவா? அது அரச தருமத்திற்கு நல்லது அல்லவா?

**வசிட்:** தங்கள் கூற்று ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருந்தாலும் இருக்கலாம்.

**விசுவா:** முனிவர் அதை ஆதரித்தால் சபலை என்னிடத்து இருப்பதில் ஏதம் ஒன்றில்லை. உங்கள் ஒரு சபலைக்கு நான் ஒரு இலட்சம் கோமாதாவைக் கொடுக்கின்றேன்!!

**வசிட்:** ஆனினங்கள் இலட்சம் இலட்சமாக எண்ணித் தந்தாலும் சபலையைத் தருவதில் எனக்குச் சம்மதம் இல்லை.

**விசுவா:** முனிகோவே! கோவினைக் கோடி கோடியாகக் கொடுக்கின்றேன்!!

**வசிட்:** கோ கோடிக்கணக்காகக் கோவைக் கொடுத்தாலும் சபலையைக் கொடுப்பதில் எனக்குச் சம்மதம் இல்லை

**விசுவா:** பொன்னைப் பொருப்பாகப் பொழிவேன்!!

**வசிட்:** பொழிந்தாலும் புரலவரே!! நான் போற்றும் சபலையைப் போகவிட மாட்டேன்!!

**விசுவா:** தபசியாரே....! இன்னும் அவகாசம் தருகின்றேன்!! ஆறுதலாகச் சிந்தித்து அமைதிக்கான பதிலைத் தாருங்கள்.....!

**வசிட்:** சிந்திக்க வேண்டியவன் நான் அல்லன் முடி மன்னரே! என்னை வந்திக்காமல் நிந்திக்கும் தாங்கள் பாச பந்தத்தில் முந்தி விட்டீர்கள்!! தாங்களும் ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்....

**விசுவா:** வசிட்ட ரிஷி சிரேட்டரே!

**வசிட்:** அரசே! அதட்டலால் ஆசையை நிறைவேற்றி விடலாம் என்று மிரட்டாதீர்கள்...! நானோ ஆச்சிர வாசி...... வாசி அற்ற பரதேசி....

**விசுவா:** என்ன சொல்லுகின்றீர்கள் முனிவரே?

**வசிட்:** பெருந்தன்மை உள்ளவனை விட்டுப் புகழ் பிரிந்திருக்குமா? அது போலத் தான் அரசே சபலையும் என்னை விட்டுப் பிரிந்திருக்க மாட்டாது. எந்த இடத்திலும் எந்த வேளையிலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சபலை சற்றும் விட்டு விலகாது!

**விசுவா:** முனிவரே! மொழியும் சபலை பிரிந்திருக்க முடியாது தானா?

**வசிட்:** ஆம், அரசே! என்னை நம்புங்கள்! வம்பிற்கு வாராதீர்கள்!!

**விசுவா:** தாங்கள் ஒரு பிரம்ம ஞானியாக இருந்துங் கூட அரச ரிஷியிடத்தில் இவ்வாறாகவா வாதம் புரிந்து விவாதிப்பது?

**வசிட்:** எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அல்ல அரசே! விவாதிக்காமல் விடயத்தை விளக்கிப் புரிய வைக்க முடியாத முட்டு நிலை முன்நிற்கும் போது வேறு வழி ஏது?

**விசுவா:** இப்போது வந்த இடர்ப்பாடு என்ன?

**வசிட்:** கேளுங்கள் அரசே! நான் செய்யும் தேவதை காரியங்களுக்கு உதவி புரியச் சபலை வேண்டும். காலை மாலை உச்சிப் போதில் நிகழும் அக்கினி சடங்கு களைச் சரியாகச் சமாளிப்பதற்கு சபலை அருகில் இருக்க வேண்டும். இன்னும் கேட்பீர்கள்......

**விசுவா:** கேட்டது போதும்!

**வசிட்:** காமதேனுவிடைய உதவியினால் அமுதம் போன்ற இனிய பால்... குளிர்ந்த தயிர்... நறுமணம் கமழும் நெய் ஆகிய உணவுப் பதார்த்தங்களை உண்பதால்...

**விசுவா:** என்ன ஏற்படுகின்றது?

**வசிட்:** வளமான உடல் ஆரோக்கியம் உண்டாகின்றது!

**விசுவா:** (சிரிப்பு) ஆஹா....

**வசிட்:** உடல் ஆரோக்கியம் மட்டும் அல்ல...

**விசுவா:** ம்.... (சிரிப்பு) ஆஹா...ஹா....ஹா........!

**வசிட்:** உளப்பலம்... தெய்வபலமும் சித்திக்கின்றது!

**விசுவா:** அப்படியுமா?

**வசிட்:** இரத்தத்தில் சுத்தி ஏற்படுகின்றது!

**விசுவா:** ஆஹா.. இவ்வளவு தானா?

**வசிட்:** புத்திக் கூர்மை விருத்தியாகின்றது....! சத்தி வலுவடைகின்றது......!

**விசுவா:** ஆச்சரியம்!

**வசிட்:** உள்ளத்தில் புத்தெழுச்சி உதயமாகின்றது.....!

**விசுவா:** அற்புதம்!!

**வசிட்:** மனத்தில் பரிபூரண சாந்தி குடி கொள்ளுகின்றது முடி மன்னரே!

**விசுவா:** சாந்தி சனிக்கின்றது....ம்....!

**வசிட்:** வேதாங்கம் வித்தை கலை சாத்திரங்கள் தாமாகவே வந்து வலுப்பெறுகின்றன......!

**விசுவா:** முனி மொழியைக் கேட்கக் கேட்க சபலையின் மீது கொண்ட ஆசை மேன் மேலும் அதிகரிக்கின்றது!

**வசிட்:** அரசே! எனக்குள்ள தனம் சபலை. தானியம் சபலை.... சம்பத்து சபலை.... மகிழ்வு சபலை... சாந்தி சபலை... சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வு சபலை... சபலை... சபலை...

**விசுவா:** முனிவரே! சபலையை முன் வைத்து மொழிந்தது முடிந்து விட்டதா? தொடருவதற்கு இன்னும் சில பல உளவா?

**வசிட்:** சொல்லிப் புரியத் தக்கது பலவுள. சொல்லாமல் தெரிய வேண்டியதுந் சிலவுள.

**விசுவா:** முனிவருடைய சபலை சார்ந்த முடிந்த முடிபை அறிய ஆசை கொண்டேன்!!

**வசிட்:** சபலை அரசரை அணுகாது... முனிவரைப் பிரியாது!

**விசுவா:** முனிவரே! தாங்கள் தடுக்கத் தடுக்கச் சபலையை எனதாக எடுக்க எடுக்க வேண்டும் என்று மன எழுச்சி என்னுள் பொங்கி எழுகின்றது!

**வசிட்:** அரசே! ஆசையை விடுக்க விடுக்க ஆனந்தம் அடுக்கும்

**விசுவா:** நெருப்புப்போல் கொழுந்து விட்டு எரியும் அவாவை சபலையைத் தந்தால் தான் அணைக்கலாகும்! முனிவரேறே! பிரம்ம ஞானியே! சபலைக்கு ஈடாகப் பதினாயிரம் யானைகளை அலங்கரித்து அளிக்கின்றேன்!!

**வசிட்:** அரசே! சபலை மதிப்பீட்டுப் பெறுமதியை நிகர் நிற்கும் பொருள் பெறுமதிக்கு அப்பாற் பட்டது!!

**விசுவா:** இருந்தாலும் முன்னே நான்கு வெள்ளைக் குதிரைகள் பூண்டு தங்கச் சதங்கைகள் 'ஜல் ஜல்' என்று ஒலிக்கும் எண்ணூறு தங்க இரதங்களைப் பரிசிலாகப் பெறுவீர்கள் பதிலாகச் சபலையைப் பரிசளியுங்கள்!!

**வசிட்:** அரச ரிஷியே!! அன்பிற்குப் பதிலாக பகைமையைப் பரிசில் கேட்காதீர்கள்! அது ஒன்றைத் தவிருங்கள்! வேறு என்ன வேண்டுமாயினும் அது தங்கள் சொத்து. கேளாமலே பெற்றுக் கொள்ளும் உரிமை தங்களுக்கு உண்டு.

**விசுவா:** மகரிஷியே!! சபலையிடத்தில் வைத்த மனத்தை மாற்ற முடியாமல் தவிக்கின் றேன்! காம்போசம் போன்ற தேசங்களில் கந்தர்வ குலத்தில் பிறந்த பதினோரா யிரம் உத்தம குதிரைகள் உங்கள் உடைமையாக ஏற்றுக் கொள்ளுங்கள்!! தாங்கள் சபலையை எனக்குத் தரத்தான் வேண்டும்.

**வசிட்:** தவ அரசே! தர முடியாது!

**விசுவா:** தவ முனிவரே தயங்காதீர்கள்! நானாவித நன்னிறம் கொண்டன. நல்ல அழகு டையன. இளமையுள்ளன கோடி பசு நிரைகளைக் கொடுக்கப் போகின்றேன்!

**வசிட்:** சபலையைக் கொடுக்கமாட்டேன்!!

**விசுவா:** முனிவரே! முன்னிப்பாரும் முடியாது தானா?

**வசிட்:** முடியவே முடியாது! அரசே! எல்லாவகை இரத்தினங்களும் அனைத்துச் செல் வங்களும் என் பிராணனும் எனக்கு இந்தச் சபலை தான்!

**விசுவா:** சபலை தங்களை விட்டு விலகினால்....

**வசிட்:** யாகம் யக்ஞம் வைதிக லௌகிக காரியங்கள் சடங்குகள் எல்லாம் செயல் இழந்து விடும்!! வானம் மாரி குன்றும்.... வயல் விளைச்சல் தடைப்படும்... தேவ பூசை அற்று விடும். தானம் தவம் தங்காது!

**விசுவா:** உண்மை தானா?

**வசிட்:** உண்மை தான்!!

**விசுவா:** சிந்தித்துச் செப்புங்கள்!!

**வசிட்:** சிந்தனை செப்புகின்றது!

**விசுவா:** ம்.... இன்னுமா?

**வசிட்:** இன்னும் முன்னும் பின்னும் ஒன்றையே உரைப்பேன், அரசே! தாங்கள் கொடுப்பதாகக் கூறியவை எவையோ அவைகளையும் கொடுப்பனவிற்கு அப்பாற் பட்டன வற்றையும் நினைத்த மாத்திரத்தில் கொடுக்கும் வல்லமை மிக்க சபலையை யான் எப்படிக் கொடுப்பேன்?

**விசுவா:** முனிவரால் கொடுக்க முடியாததை நானே என் முயற்சியால் எடுத்துக் கொள் வேன் (சிரிப்பு) என் எண்ணம் மண்ணிலும் சரி விண்ணிலும் சரி வெற்றி அடை யும் இது திண்ணம்....... (சிரிப்பு) முனிவரே! கண் முன்பே அதைக் காண்பீர்கள் (சிரிப்பு

**(திரை)**


*** *** ***

# 'நோவன செய்யன்மின்'

தாயினால் கைவிடப்பட்ட குழந்தையொன்று அழும் ஒலியைக் கேட்டு ஒரு பசு அங்கு வந்து சேர்ந்து, அக்குழந்தையின் பசித்துன்பம் நீக்க, நாவால் நக்கி தன்பால் ஊட்டி, ஏழுநாள்வரை அக்குழந்தையை விட்டு நீங்காது பாதுகாக்க, பூதியென்னும் அந்தணன் அக்குழந்தையைக் கண்டு எடுத்து ஆபுத்திரன் எனப்பெயரிட்டு வளர்த்து வந்தான்.

ஒருநாள் யாகத்தில் ஆகுதியாக வெட்டிப்போடுவதற்காக அந்தணர்கள் யாகசாலையில் ஒரு பசுவைக் கட்டி வைத்திருப்பதையும், அப்பசு ஏங்கி அலறுவதையும் ஆபுத்திரன் கண்டான். அப்பசுவுக்கிரங்கி அன்றிரவே அப்பசுவைக் கவர்ந்து காட்டிடைக் கொண்டு சென்றான். அப்பசுவைத் தேடிச் சென்ற அந்தணர்கள் அவனைப்பிடித்து அடித்தனர். அவ்வேளை யாகத்திற்குத் தலைமைதாங்கிய அந்தணனை அப்பசு கொம்பால் குத்திக்கிழித்துக் கொன்று விட்டுக் காட்டில் பாய்ந்துவிட்டது.

ஆபுத்திரன் அந்தணர்களைப் பார்த்து 'பசுவை வருத்தாதீர்கள்' நான் சொல்வதைக் கேளுங்கள் "அரசனால் விடப்பட்ட மேய்புலத்தில், தானாகவே உண்டாகிய புற்களையுண்டு, நாம் பிறந்த நாள் முதல், சிறப்புடையதாகிய இனிய பாலை, அருள்பொருந்திய உள்ளத்தோடும், அருள்மிகுந்து உண்பிக்கும் பசுவை வருந்தச் செய்யலாமா? இப்பசுவுடன் உமக்குண்டாகிய சினம் யாது?" என வினவினார்.



"நோவன செய்யன்மின் நொடிவன கேண்மின்
விடுதலை மருங்கின் படுபுல்லார்ந்து
நெடுநிலை மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டுச் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோ டருள்சுரந்தூட்டும்
இதனொடுவந்த செற்றம் என்னை?"

நன்றி - மணிமேகலை
ஆபுத்திரன் திறம் அறிவித்தகாதை



# சிவன் அருட்கதைகள்

மாதாஜி அவர்கள்

**தோற்றுவாய்:**

எல்லாப் பிறவிகளிலும் மானிடப்பிறவி சிறந்த என்பது ஆன்றோரின் அனுபவ முடிபாகும்.

அப்படி மானிடப்பிறவி வாழ்க்கையைச் சிறந்த வாழ்வாக்குவது இறைவனுடைய தோன்றாத் துணையாகும். இத்தகைய கொள்கை உலகம் தோன்றப்பட்ட காலத்திலேயே நடைமுறையில் இருந்து வந்தது. இப்போது இறை நம்பிக்கை கூடுதலாக மக்களிடையே தளர்ந்தமையால், பயனற்ற குறிக்கோளற்ற வாழ்க்கை வாழ்வதால் இயற்கையின் சீற்றத்தாலும் செயற்கையின் பகைமையாலும் மனித இனம் மெல்ல மெல்ல அழிவதை நாம் கண்ணால் காண்கின்றோமல்லவா?

மனித வாழ்வை நன்கு கணித்து வழிப்படுத்த நான்கு யுகங்கள் இருந்தன. அவைகள் நான்கு விதமான தர்மங்கள் உடையன என்பதைத் தரும தேவதையான பசு காண்பித்தது.

முதலாவது கிரேதா யுகத்தில் வாழ்ந்த மக்கள் தர்ம சிந்தனையுடன் தர்மத்தை வளர்த்தனர் ஒளியளவேனும் பொய் களவு முதலியன காணப்படாமையால், தரும தேவதையாகிய பசு நான்கு கால்களையும் ஊன்றி நடந்து புல் முதலியன மேய்ந்து தண்ணீர் குடித்து சந்தோஷமாக வாழ்ந்தது.

இரண்டாவது யுகமாகிய திரேதாயுகத்தில் சிறிது சிறிதாக மனிதன் பொருளில் ஆசை கொண்டான். இதனால் சிறிது சிறிதாக நாட்டில் பொய் களவு வளரத் தொடங்கியது. தர்ம தேவதையாகிய பசுவும் ஒரு காலை உயர்த்தியது. அதனால் அது மிகவும் துன்பப்பட்டு புல்மேய்ந்து தண்ணீர் குடித்தது.

துவராக யுகத்தில் மனிதனுக்கு பொருளாசை வளர அதனால் தருமதேவதை மேலும் ஒருகால் அதாவது இருகாலை உயர்த்தியது. கலியுகமாகிய இக்காலத்தில் அதர்மம் மூன்று பங்காகியதால் அதர்மச் செயல்கள் மீதூர மீதூர தர்மமாகிய பசு மூன்று கால்களையும் மடக்கி ஒருகாலை நீட்டி மிகமிகத் துன்பப்படுகின்றது. அதாவது கலியுகமாகிய இக்காலத்தில் மூன்று பங்கும் அதர்மமும் ஒரு பங்கு தர்மமும் காணப்படுகின்றது.

இதனால் இறைவழிபாடு, இறைவாழ்வு, இறை சிந்தனை அருகி மக்களின் வாழ்வு அலங்கோலப்படுவதால் அமைதியின்றிக் காணப்படப் புறச்சமயங்கள் தோன்றி, மக்களைத் தம் வழிப்படுத்தின. இதனால் சைவ சமய அருளாளர்கள் மலர்ந்து, சைவசமய உண்மைகளைப் புராணம் இதிகாசம் திருமுறைகள் சித்தாந்தமூலம் மக்களுக்குப் புலப்படுத்தி மக்களை நல்வழிப்படுத்தினர்.

**புராணம்:**

இந்த முறையிலே தான் பரஞ்சோதி முனிவர் அக்காலத்திலுள்ள தவத்திரு முனிவர்களுக்குச் சிவபெருமானின் திருவிளையாடல்களைக் கூறினதாக திருவிளையாடல் புராணத்திற் காண்கின்றோம்.

மனம் மொழி வாக்கு ஆகியவை சுத்தமாகி இறைவன்பாற் செல்லும் போது இறைசெயல் பெருக நாட்டில் அமைதியும் இன்பமும் பெருக, தீயவை தீயபயக்கும் விளைவிக்கும் ஆகிய சுமைகள் விலகும்.

அக்கால முனிவர்கள் அதாவது துவாரகயுகம் மறைந்து, கலியுகம் தோன்றும் அக்கால முனிவர் முதலானோர் கலியுகத்தில் வாழ்வோர் கலியுகக் கொடுமைகளால் பீடிக்கப்படாமல், அதனால் துன்பப்படாமல் இருக்கக் கையாண்ட புராண வரலாறு இன்றும் எமக்குக் கைகொடுப்பதால் யாவரும் படித்து வையகத்தி வாழ்வாங்கு வாழ அருள்ஒளி மூலம் இப்புராணக் கதைகளை சர்வ வல்லமை கொண்ட எமது கிராம குப்பிளான் சொக்கவளவுச் சோதி விநாயகர் அருளும் உலகமெல்லாம் நித்திய கன்னியாக இருந்து அருளாட்சி செய்யும் தெல்லிநகர் அருள்மிகு ஸ்ரீ துர்க்காம்பிகையின் திருவருள் நோக்கும் துணைசெய்ய எழுதத் தொடங்கினோம்.

சிவபெருமான் உலகின் முதற் தெய்வம். உலகம் எப்போது தோன்றியதோ அப்போதே சிவத்தைக் குறிக்கும் சைவமும் தோன்றியது. சிவம் எனினும் சைவம் எனினும் “அன்பு” என்ற பண்பை மட்டும் குறிக்கும்.

சிவபெருமான், நித்தியர், வியாபகர், தம்வயத்தர், தூயவர், இயற்கை அறிவினர் இத்தகைய எம்பிரானை எல்லா முனிவர்கள், பிரமன் தேவன் முதலியோரும் வணங்க எண்ணற்ற சூரியர்களின் பிரகாசமுடைய சிங்காசனத்தில் தமது அருட்சக்தியாகிய உலக மாதாவாகிய உமாதேவியாரின் இடப்பாகத்தில் அளவிறந்த பெருங்கருணையோடு எம்பெருமான் வீற்றிருந்தார்.

சிவபெருமான் வீற்றிருந்த திருக்கோயிலுக்கு முன் உள்ள சிவதீர்த்தக் கரையிலே ஒரு ஆயிரங்கால் மண்டபம் உண்டு. அந்த மண்டபத்தில் வியாசபகவானின் மாணாக்கன் சூதமுனிவர் புலித்தோல் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அப்பொழுது சதானந்தர் உத்தமர் வகோதரர் உக்கிரவீரியர் பிரசண்ட முனிவர்கள் அந்தச் சிவதீர்த்தத்தில் நீராடி வேதாகம விதிப்படி அனுட்டான முதலிய சந்தியா வந்தனம் முதலியவற்றை முடித்து சிவனை வணங்கியபின் பயபக்தியுடன் சூதக முனிவரின் திருவடிகளுக்கு மலரால் அருச்சனை செய்தார்கள்.

பின்னர் அவர்கள் இருகைகூப்பி முனிவரை வணங்கிச் “சுவாமி, தாங்கள் முன்பு எங்களுக்கு விளங்கித் தெளியும் படி எம்பெருமானின் அரும்செய்யற்பாடுகளை அருள்செய்தீர்கள். இப்போது எம்பெருமான் எழுந்தருளி இருக்கும் ஆலயங்களில் மேலான ஆலயம், தீர்த்தம், தலம், மூர்த்தி நன்னிடத்தே எழுந்தருளிய தலமொன்று எங்கட்குச் சொல்லியருள வேண்டுமென விண்ணப்பம் செய்தார்கள்.

இதனைக் கேட்ட சூதமாமுனிவர், அகமுகம் மிக மலர்ந்து உலகம் காக்கும் முழுமுதற் பொருளாகிய சிவபெருமானையும், தனது குருவாகிய வியாசமுனிவரையும் சிந்தனை செய்து வணங்கினார். ஓர் கருமம் நல்லபடியாக ஈடேற வேண்டின் குருவருளும் திருவருளும் அவசியமானது. இரண்டு அருள்களும் மனிதவாழ்க்கையை மேம்படுத்தும் பின்னர் தலங்களை நன்றாக நினைந்து ஆராய்ந்து முனிவர்களை நோக்கி "முனிவர்களே! பதினெண் புராணங்களுள், சனற்குமார சங்கிதை முதல் சூரசங்கிதையென ஆறுசங்கிதைகளுண்டு. இவற்றுள் சங்கரசங்கிதை பமரசிவனாலே உமாதேவியாருக்கு அருளப்பட்ட போது, முருகக்கடவுள் அம்மையாரின் மடியிலிருந்து கேட்டுணர்ந்து தம்மை வழிபடுகின்ற அகத்திய முனிவருக்கு உபதேசம் செய்தார். அன்று தொடக்கம் அகத்திய சங்கிதை என்று வழங்கப்பட்டு வருகின்றது. அதனுள்ளே கேட்பவர்கட்கு முத்தி கொடுக்கும் சிவதலமாக திருவாலவாய்" என்றும் தலம் பற்றிக் கூறப்படுகின்றது.

திருவாரூரில் பிறந்தால் முத்தி, சிதம்பரத்தில் தரிசித்தால் முத்தி, திருவண்ணாமலையை நினைத்தால் முத்தி, காசியில் இறந்தால் முத்தி. ஆனால் (மதுரை) ஆலவாயைக் கேட்டால் முத்தி தரும் என்ற மாத்திரத்தில் முத்தி என்று சூதக முனிவர் கூறவும், அந்த முனிவர்கள் அகமகிழ்ந்து ஆனந்தம் கொண்டார்கள்.

பின்னர் சூதகமுனிவர் அத்தலத்தின் பெருமைகளை அகத்திய முனிவரிடம் கேட்டறியும்படி திருவாய் மலர்ந்தார். அவ்வாறே அம்முனிவர்கள் அகத்தியரிடம் சென்று, அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் துதித்து, "கருணாநிதியே தலவிசேடம் தீர்த்த விசேடம் மூர்த்தி விசேடம் என்னும் இம்மூன்று விசேடங்களும் ஒருங்குடைய ஒரு சிவதலம் அடியேங்களுக்குத் திருவாய் மலர்ந்தருள" வேண்டுமெனப் பிரார்த்தனை செய்தார்கள்.

அகத்திய மாமுனிவர் திருமுகம் மலர்ந்து அருள்கூர்ந்து முத்தி மண்டபத்தில் வந்து அமர்ந்தார். பின்னர் முருகக்கடவுள் விநாயகக்கடவுள் முத்தி மண்டபத்தில் முத்தியடைந்த நான்கு கோழிகள் சிவபெருமான், பார்வதி யாவரையும் நெஞ்சுப் பெட்டகத்தில் இருத்தி அன்பினாலும் பக்தியினாலும் நெஞ்சுப் பெட்டகத்தில் அவர்களை இருத்தி அபிடேகம் செய்து, மெய்மறந்து கண்ணீர் நதிபோல் பெருக, இருடிகளே திருபாசமுத்திரராகிய சிவபெருமான், பார்வதிதேவியாருக்கருளிய சங்கர சங்கிதையை எமது குருவான முருகப்பெருமான் எமக்கருளினார். அதனை உமக்கு உபதேசிப்போமென அகத்தியர் அருளினார்.

அந்தச் சங்கிதையில் நீங்கள் வினாவிய தலம் ஒன்றுண்டு. அங்கு செய்தற்கரிய தவம் செய்து சித்தியும் ஞானமும் இலகுவில் பெறலாம். வேதாந்தப் பொருளாகிய எம்பெருமான் ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங்கருணையினால் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் செய்த தலம். அதன் பெயர் திருவாலவாய். அது பூலோக சிவலோகம் அந்தத் தலத்தின் மூன்று விசேடங்களையும் சோமசுந்தரக் கடவுள் செய்தருளிய அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் எமது ஆசாரியார் திருவாய் மலர்ந்தபடி உங்களுக்குச் சொல்வோம் என அருளினார்.

**"நற்செய்திகள் என்றும் நன்மை அளிக்கும்"**

(தொடரும்)

# திருவாசகமும் மணிவாசகரும்

கலாபூஷணம்,
வை. க. சிற்றம்பலம் அவர்கள்

சமய குரவருள் ஒருவராகிய மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் பன்னிரு திருமுறைகளில் எட்டாவதாக வகுக்கப்பட்டுள்ளது. இத்திருவாசகம் சிவபெருமானே ஒரு அந்தணர் உருவெடுத்து மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல எழுதிய பெருமைக்குரியது. மக்கட் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் பொருளறிந்து நல்லுணர்வுடன் இறைவனை வணங்குவதற்கு வாய்த்த பெருமையுடையது. இவ்வாசகம் ஒவ்வொன்றையும் படிக்கும் போது நெஞ்சை உருகச்செய்து இறைவனிடம் சேர்ப்பிக்கும் ஆற்றல் வாய்ந்தது. படிக்கும் தோறும் காதலாகிக் கண்ணீர் பெருக்கும் பான்மையதால் மேனாட்டவராகிய போப் என்பவர் இதனை ஆங்கிலத்தில் மொழியெர்த்தார் என்பர். திருவாசகம் ஐம்பத்தொரு நிலைகளாக வகுத்துப் பாடப்பட்டது. முதன்முதற் பாடிய சிவபுராணம் தில்லையிலேயே அருளப்பட்டது. கடைசி ஐம்பத்தோராவது அச்சோப் பதிகமும் தில்லையிலேயே பாடியுள்ளார். பாடியவற்றுள் சிதம்பரத்திற்கு இருபத்துநாலு பதிகமும் திருப்பெருந்துறைக்கு இருபது பதிகமும் இருபதிகம் திருஅண்ணாமலைக்கும் திருஉத்தரகோசமங்கைக்கு இருபதிகமும் திருவாரூர் திருத்தோணிபுரம் திருக்கழுக்குன்றம் மூன்றுக்கும் தனித்தனியொவ்வொன்றும் அன்புருக என்புருக பாடியுள்ளார்.

சுவாமிகள் பாடிய ஒவ்வொரு வாசகமணிகளும் இறைவனையே நோக்கிப் பாடப்பட்டதேனும் மெய்யடியார்கள் படித்து அவ்வழி பெருமானை அடையவேண்டுமென்னும் ஆர்வம் மீதூர இந்த உலக பாசங்களனைத்தையும் தவிர்க்க வேண்டுமென்ற உட்பொருளமையும்படி தன்னுடைய அனுபவங்களையும் பொதிந்து பாடியிருப்பது பற்றி நாம் எமக்கு அவர்செய்த பரோபகாரமென்று நினைந்து அவரைப் பூரணமாகப் போற்ற வேண்டியவராவோம். திருவாசகத்தைப் பாடிப்பாடிச் சுவைப்பதானால் தானாகவே பக்தியினால் உள்ளத்தில் அன்பூற்றெடுத்துக் கண்வழியாக பிரவாகிக்கும் தனித்தனி ஒவ்வொரு பதிகத்தையும் சற்று ஓய்வுறப் படித்தால் உணர்ந்தால் இந்நிகழ்வு தன்பாட்டிலேயே நிகழும். மெய்யன்பர்களுடைய சபையிலே வாரத்துக்கு ஒன்றாக ஒரு வருடம் முழுவதையும் நன்கு விரித்து உணரும் படியாக சொற்பொழிவாற்றி வந்தால் இதன் அளப்பெரும் பயனை அடையலாம். அடுத்து ஐம்பத்தொரு நாளிலும் விரித்துரைக்கலாம். நாவலர் பெருமான் காலத்திலிருந்து இன்றுவரை எமது சைவமக்கள் பஞ்சபுராணத்திலொன்றாக திருவாசகத்தை ஓதுவதும் சகல சைவ கொண்டாட்டங்களிலும் சிவபுராணத்தை ஓதுவதும் திருவெம்பாவை நிகழும் மார்கழியில் வைகறையாமத்தில் மெய்யடியார்கள் கூட்டமாக வீதிகள் தோறும் திருப்பள்ளியெழுச்சி பாடிக்கோயிலில் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடி வருவதும் மகிழ்சிக்குரியது.

குறிப்பு: திருவெம்பாவைக் காலத்தில் அன்று பொதுவாக எந்த நேரத்திலும் தனியே திருவாசகமே படித்து வந்தனர் என்பதை நாம் மறந்துவிடலாகாது. பொதுவாக நம் சைவப் பாடசாலைகளில் வெள்ளிதோறும் நடக்கும் பிரார்த்தனையில் சிவபுராணம் ஓதி வருவது பாராட்டுதற்குரியது.

இச்சிவபுராணத்தில், இறைவனின் திருவடியைப் பலவாறாகப் புகழ்ந்து பாடிய வாசகர் முன்னரே பல பிறவிகளை எடுத்து அலைந்து மீண்டு இந்த மனிதப் பிறவியை எடுத்தமையும் பாடி, இப்பிறப்பில் தன்னை ஆட்கொள்ள

வேண்டுமெனப் பாடியுள்ளார். மற்றும் போற்றித் திருஅகவலில் தாயின் கருப்பத்தில் தொடங்கி மக்கள் பிறந்து வளர்ந்தமை பற்றிக் கூறுகிறார். இப்படியே ஒவ்வோர் பதிகத்திலும் பலவாறாக இம்மை மறுமைப் பிறவிகளில் பிறந்தாலும் எப்பொழுதும் மறவாமல் இறைவன் பற்றே பற்றாக பாடியிருப்பது நோக்கத்தக்கது. உலகப் பற்றிலே சிற்றின்பத்தில் தான் புகாமை மிகப்பெரிய காரியமாக புலப்படுத்தி வந்த சுவாமிகள் ஆரம்பத்திலேயே பொருளால் வந்த துன்பத்தில் அதற்கு ஆட்பட்டு அதனை வேரோடு களைந்து விட்டார். மேலும் தன்னை தீவினை யாளருடன் சேராமல் காப்பாற்றியமையும் பற்றிக்கூறி இறைவனின் திருக்காட்சிகள் பற்றிப் பரவலாகக் கூறிப் பாராட்டியுள்ளார்.

திருவெம்பாவை பகுதியிலே பாவையர்களை நோக்கிப் பாடியமை யெல்லாம் நாம் ஊன்றி கவனிக்கவேண்டும். மனிதப் பிறவியை எடுத்து அல்லலுறும் அனைவருக்கும் அவர்களை வைகறையில் தட்டி எழுப்புமாறும் இறைவனது பாதார விந்தத்தின் சிறப்பையும் அதை அடையுமாறும் அதில் நன்றாகக் கூறிவழிப்படுத்தியுள்ளார். ஆகவே தான் மார்கழித் திருவாதிரை நாளில் அகில உலகத்திலும் சிறப்பாக சிதம்பரத்திலும் நடைபெறும் அப்பெருமானது திருவடிமலர அன்புகூரச் செய்யும் திருமஞ்சனச் சிறப்பினால் அதைக் காணுமாறும், விடிந்தபின் நடராசப்பெருமான் பக்தர்கள் புடைசூழ சிவகாமியம்மையுடன் எழுந்தருளப் பெறுவதும் உயர்ந்ததாக எண்ணப்படுகிறது. சுவாமிகள் பாடிய வாசகத்துக்கு பொருள் கேட்டவர்களுக்கு அவர் மிக உயர்ந்ததாகிய நடராசப் பெருமானையே பொருளென்று சுட்டிக் காட்டியமை பற்றி நாம் வியப்படையாமலிருக்க முடியாது. இத்திருச் சிறப்பாலும் மார்கழித் திருவாதிரை நாள் மிக உயர்வாகக் கருதப்படுகிறது.

இத்திருவெம்பாவைப் பதிகத்தில் சிக்குண்ட சிவபெருமான்

'பாவை பாடிய வாயால் கோவை பாடு'

என்பதில் என்ன வியப்பிருக்கிறது. அந்தத் திருவாக்கைக் கேட்ட மணிவாசக சுவாமிகள் பேரின்பத்தைத் தருவதாகிய திருக்கோவையாரை, அகத்திணை தழுவியதாகப் பாடியமை கற்றுணர்ந்தார்க்கும் பெருவிருந்தாகும்.

தமது முப்பத்திரண்டாம் வயதில் இப்பெரிய வாசகத்தையும் கோவையா ரையும் பாடிய மாணிக்கவாசக சுவாமிகள் ஆனி மாசத்தில் வரும் மகம் நட்சத்திரத்தில் இறைவனுடன் இரண்டறக் கலந்தார் அவர் திருவடி வாழ்க.

முத்திநெறி யறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்திநெறி யறிவித்துப்
பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா
றார் பெறு வாரச்சோவே.

"நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான்றாள் வாழ்க"

வணக்கம்

# நவராத்திரி விரத வியாபகம்

சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள்
மட்டுவில்.

இறைவழிபாடுகளுக்குள் விசேடமாக சக்தி வழிபாட்டுக்குரிய காலமே நவராத்திரி எனப்படும். சிவம் சக்தி இரண்டும் ஒன்றையொன்று விட்டுவிலகாமல் நெருப்பின்கண் சூடு போலவும், மலரின்கண் மணம் போலவும் எங்கும் வியாபித்திருக்கின்றது. சக்தியின்றேல் சிவம் இயங்காது. ஒரு மனிதன் இயங்க முடியாமல் படுத்துக்கிடக்கிறான் என்றால் அவனுக்கு இயங்க சக்தியில்லை என்பது பொருள். உலகம் முழுவதும் சக்தியின் திருவருளினாலேயே இயங்குகிறது. இந்த சக்தியை பெண்ணுருவாகக் கண்டு தாய்மையோடு ஒப்பிட்டு "அன்னை பராசக்தி" என்று நம்மவர்கள் வழிபட்டுவருகிறார்கள். குழந்தையானது தெரியாமல் சில பிழைகள் செய்தாலும் தாயானவள் அதனைப் பொறுத்துக்கொண்டு குழந்தையை அணைத்து அன்பு சொரிகின்றாள். அதே போல் அன்னையை நாம் எப்படி உபாசித்தாலும் அதனை ஏற்று எமக்கெல்லாம் திருவருள் சொரிகின்றாள்.

குழந்தைகளாகிய நம்மாட்டு பரிவுகொண்டு அம்மையானவள் துர்க்காதேவியாகி வீரத்தையும், வெற்றியையும், இலக்குமிதேவியாகி செல்வத்தையும், சிறப்பையும் சரஸ்வதிதேவியாகி கல்வியையும், ஞானத்தையும் அருளுகின்றாள். இம் மூன்றும் நம் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகும். இவற்றை வேண்டியே நவராத்திரி காலத்தில் முதல் மூன்று நாளும் துர்க்காதேவிக்கும், நடு மூன்று நாளும் இலக்குமி தேவிக்கும், இறுதி மூன்று நாளும் சரஸ்வதி தேவிக்கும் பூஜைகள் வழிபாடுகள் நடைபெறுகின்றன.

பண்டிகைகளும், விழாக்களும், விரதங்களும் இந்துசமயத்தில் அநேகமாக சோதிடத்தை அடிப்படையாகக் கொண்டே எழுந்தவை. ஒவ்வோர் விரதங்களும் அவ்வவற்றிற்கு விதிக்கப்பட்ட நியமப்படி அவ்வக்காலங்களில் செய்தால் தான் அவற்றின் பூரணபலன் கிட்டும். இவ்விஷயத்தில் சிவாசார்யர்கள், ஆலய தர்ம பரிபாலகர்கள், மதஸ்தாபனங்கள் முக்கிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

இந்த நவராத்தியானது புரட்டாதி மாதத்தில் வரும் அமாவாசைக்கு அடுத்த நாளாகிய ஆசுவின சுக்லபக்ஷ பிரதமையில் ஆரம்பித்து தசமியீறாகிய 10 தினங்கள் நடைபெறும். ஆசுவினம் என்பது சாந்திரமான (சந்திரனைக் கொண்டு கணக்கிடப்படும்) மாதப் பெயராகும். அதாவது பூர்வபக்க பிரதமை தொடங்கி அமாவாசை முடியவுள்ள காலம் சாந்திர மாதம் எனப்படும். இதனை சைத்ரம், வைசாகம், ஜ்யேஷ்டம், ஆஷாடம், சிராவணம், பாத்ரபதம், ஆசுவினம், கார்த்திகம், மார்க்கசிரம் பௌஷம், மாகம், பாற்குணம் எனச் சித்திரை தொடக்கம் பங்குனியீறாக வழங்குவர். சித்திரை மாத அமாவாசைக்கு அடுத்தநாள் வைசாகம் ஆரம்பித்து விடும். இதே போல் புரட்டாதிமாத அமாவாசைக்கு அடுத்த நாள் ஆசுவினம் ஆரம்பித்துவிடும். பஞ்சாங்கத்தில் புரட்டாதி அமாவாசைக்கு அடுத்த நாள் ஆசுவின சுத்தம் எனக் குறிப்பிட்டிருப்பது இதுவேயாகும்.

நவராத்திரி, பிரதமைத்திதியன்று ஆரம்பிப்பதாக இருந்தாலும் அதற்கும் சில நியதிகள் சொல்லப்படுகின்றன.

1. ஆசுவின சுத்தம் வரவேண்டும்.
2. பிரதமைத் திதியானது அமாவாசையோடு சேர்ந்திருக்கக் கூடாது.
3. அமாவாசையோடு சேர்ந்த பிரதமையை நீக்கிவிட்டு துவிதீயையோடு சேர்ந்த பிரதமையில் விரதாரம்பம் கொள்ள வேண்டும்.

திதியின் ஆரம்ப முடிவுகளை பஞ்சாங்கத்தில் பார்த்துக் கொள்ளலாம். ஒரு திதியானது ஒரு தினத்தில் எந்த நேரத்திலும் ஆரம்பித்து அடுத்தநாள் எந்த நேரத்திலும் முடிவு பெறலாம். ஒரு திதியின் வியாபகம் (Duration) 53 நாழிகை முதல் 67 நாழிகை வரை இருக்கும் சில தினங்களில் ஒரு தினத்தில் மூன்று திதி சம்பந்தப்படும். ஒரு திதி மூன்று தினங்களுக்கும் சம்பந்தப்படும். இதனாலேயே ஒரு திதி இன்னுமொரு திதியுடன் சேரும் நேரங்கள் வேறுபடுகின்றன.

**"அமாயுக்தா நகர்த்தவ்யா பிரதிபத் பூஜனே மம**
**முகூர்த்த மாத்ரா கர்த்தவ்யா த்விதீயாதி குணான்விதா" - தேவீ புராணம்**

(அமாவாசையுடன் சேர்ந்த பிரதமையில் நவராத்திரி பூஜை ஆரம்பிக்கக் கூடாது. பிரதமை சிறிது நேரமாவது துவிதீயையுடன் கூடியிருந்தால் அத்தினமே கொள்ளப்பட வேண்டும்.)

**"அமாயுக்தா ஸதாசைவ பிரதிபன் நிந்திதாமதா**
**தத்சேத் ஸ்தாபயேத்கும்பம் துர்பிக்ஷம் ஜாயதே துருவம்" - தேவீ புராணம்**

(அமாவாசையுடன் சேர்ந்த பிரதமையில் கும்ப ஸ்தாபனம் செய்தால் நாட்டில் பஞ்சம் வறுமையுண்டாகும்.)

இவற்றிலிருந்து அமாவாசை சேராத பிரதமையில் விரதாரம்பம் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகின்றது. இவ்வாறு பிரதமையில் நவராத்திரி ஆரம்பித்து, நவமி ஸாயங்கால வியாபகமாக இருக்கும்போது மஹாநவமி, சரஸ்வதி பூஜை, ஆயுதபூஜை என்பனவும், தசமி ஸாயங்கால வியாபகமாக இருக்கும்போது விஜய தசமியும் கொள்ளப்படும். திதி விபாயபத்தைப் பொறுத்து நவராத்திரி 10 தினங்களோ 9 தினங்களோ 11 தினங்களோ வரக்கூடும். ஆரம்பத்துக்கும் முடிவுக்கும் கட்டுப்பாடுகள் இருப்பதால் சில சந்தர்ப்பங்களில் நாட்கள் கூடிக் குறைவது தவிர்க்க முடியாததாகும்.

திதிகளின் வியாபக நேரம் குறைவாக இருந்தால் ஒரு நாளில் இரண்டு திதி சேர்ந்துவிடும். அவ்வாறு வரும்போது இரு திதிகளுக்குமுரிய பூஜை அன்று செய்யப்படவேண்டும். மூல நட்சத்திரம் இருக்கும்போது சரஸ்வதி பூஜை ஆரம்பிக்கப்படும். இவ்விரண்டு நியதிகளையும் கொண்டு ஏனைய சக்திகளுக்குரிய தினங்களைப் பங்கிட்டுக் கொள்ள முடியும். இவ்வாறு பார்க்கும்போது சில காலங்களில் ஒரு சக்திக்கு இரண்டு தினமும், வேறு சில காலங்களில் ஒரு சக்திக்கு நான்கு தினங்களும் வரக் காரணமாகும்.

விஜயதசமியை நோக்குகையில் மாலைக்காலத்தில் தசமி வியாபகமிருத்தல் அவசியம். அன்று திருவோணம் சேருமானால் மேலும் விசேஷத்தைக் கொடுக்கும். திருவோணம் சேராதிருந்தாலும் தசமியே இவ்விடத்தில் முக்கியமானதாகும்.

இவ்வாறு உரிய காலத்தில் விரதாதிகளை அனுஷ்டித்து மக்கள் இம்மை மறுமைப் பயன்களை அடைவார்களாக!

**நன்றி: நவராத்திரி**
**கல்வயல் இந்து இளைஞர் மன்ற வெளியீடு**

ஸ்ரீ குமரகுருபர அடிகள் அருளிய

# சகலகலாவல்லி மாலை



1. வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ சகமேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண்டாக் கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

3. அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல கலாவல்லியே.

4. தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ்சொற் சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே.

6. பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே.

7. பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

8. சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நாளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

9. சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே.

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே.

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
# வேட்டைத் திருவிழா


தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்
ஆடலுக்குப் பயன்படுத்திய உருவங்கள்



பொம்மை ஆக்கம்:
தெல்லிப்பழை இளைஞர் சங்கம்.

# வரலாற்றுச் சிறப்பு மிக்க
# பருத்தித்துறை வல்லிபுரக் கோவில்




பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம், நல்லூர்.